Approved By The Text-Book Committee of Madras and Burma

புதிய பிரதம பாடம்

மூன்றாம் புத்தகம்

துரைத்தனத்தார் அங்கீகரித்தது

T12835
R003L05

ஆ. ராஜாப் பிள்ளை
ளிஷர் & புக்ஸெல்லர்
மதுரை

T·12835

ரிஜிஸ்தர் செய்தது] 1934 [விலை அணா 4

முன்னுரை

நம் தமிழ் நாட்டில் பிரதம வகுப்பிற்குத் தொடர்ச்சிப் பாடப் புத்தகங்கள் பல வெளிவந்துலாவுகின்றன. அப்படி வெளிவந்துலாவினும் வகுப்பிற்குத் தகுந்தவாறு அமைந்துள்ளன என்று சொல்வதற்கில்லை. சில அமிதமாயும், சில குறைவாயும் எழுதப்பட்டிருக்கின்றதென்பது பெரும்பாலோர் கருத்து. இக்குறைகளை உத்தேசித்தும், நன்கு ஆலோசித்தும் இப்புத்தகம் எழுதலானேன்.

இப்புத்தகத்தில் கடவுள் வாழ்த்தும், இராஜ வாழ்த்தும் மாணவர்கள் மனதிற் படியும் வண்ணம், நம் தமிழ் நாட்டில், பழக்கத்தில் வழங்குகின்ற எளியபாட்டுக்களின் மெட்டுக்களைக் கொண்டு எழுதியிருக்கிறேன். நிற்க, இப்புத்தகம் முன் இரண்டாம் புத்தகத்தின் தொடர்ச்சியாகவும், முதலில் குடும்பத்திலுள்ள சுற்றத்தார்களைப்பற்றியும், கிராம வாழ்க்கையைப் பற்றியும், அரசரைப்பற்றியும், படிப்படியாகவும், இயற்கைப் பொருட் பாட சம்மந்தமாகவும், எழுதியிருக்கிறேன்.

இன்னும், இப்புத்தகத்தில் மூன்றாவது வகுப்பு மாணவர் அறியவேண்டியதும், அவர்கள் அனுதினமும் பார்ப்பதுமான இயற்கைப் பொருள்களைப்பற்றியும், தீபாவளிப்பண்டிகை போன்ற, நம் நாட்டில் பழக்கத்தில் இருந்துவருகின்ற கதைகளைப்பற்றியும், விடுகதைகளும், வழிநடை வார்த்தைகளும், உற்சாகமாய் மாணவர்கள் படித்தறியும் வண்ணமும், வைசூரி, சுகாதாரம் முதலியவற்றைப் பாட்டுருபமாகவும், பிறருக்கு உழைப்பு என்ற பாடத்தை சம்பாஷணையாகவும், செய்யுளாகவும், கடவுள் செயல்களைப்பற்றியும், எழுதிச்சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் இப்புத்தகத்தைக் கண்ணுறும் கலாசாலை அதிகாரிகளும், உபாத்தியாயர்களும், நன்கு ஆராய்ந்து தங்கள் கலாசாலைகளில் இப்புத்தகத்தையும், இதன் தொடர்ச்சிப் புத்தகங்களையும்வைத்து என்னை ஆதரிக்கும்படி கேட்டுக்கொள்ளுவதோடு, இப்புத்தகத்தில் குற்றம், குறைகள் இருப்பின் அவற்றையும் அறிவிக்குமாறு வேண்டுகின்றேன்.

ஆக்கியோன்

புதிய பிரதம பாடம்

மூன்றும் புத்தகம்

துரைத்தனத்தார் அங்கீகரித்தது

031,6 2
F4

க. ஆ. ராஜாப் பிள்ளை
பப்ளிஷர் & புக்ஸெல்லர்
மதுரை

ரிஜிஸ்தர் செய்தது]   1934   [விலை அணா 4

Printed at the
Meenakshi Vilas Press, Madura.
1934.

T012835
Sarasvati Mahal Library. Thanjavur

கடவுள் வாழ்த்து

'பித்தா பிறை சூடி—என்ற மெட்டு.'

எல்லாம் வல்ல நாதாபுவி எங்கும் நிறை போதா
நல்லோர் பணிந்தேத்தும் பவ நாசா அருள் செய்வாய்
பல்லாயிரங் கோடி அண்டம் படைத்த பெருந்தலைவா
சொல்லார் துதிசெய்தோம் துணை வாவா பெருமானே.

ஆதி யந்தம் இல்லாத் தனி அரனே பராபரனே
தீதில் அடியார்கள் குறை தீர்க்கும் அருட்செல்வா
நீதி மறை பேசுங் குண நீதா கனவேதா
போதில் மறவோமே உனைப் போற்றப் பெருமானே.

தாலமதில் வாழும் உயிர் தாங்கும் தனித்தாதா
சீலமுடன் ஓதுதமிழ்ச் செல்வந் தருந் தேவா
சால நவையாஞ் செய்யினும் தற்காப்ப துன்கடனே
காலங் கடந்தோர்கள் மனம் காணும் பெருமானே.

தந்தைநீயே தாயும்நீயே சாரும் பல பொருளும் நீயே
முந்தை வினை தீர்க்குந்திரு மூவா ஒரு முதல்வா
சிந்தை மலர் மேவியுந்தன் சேயர் எண்ணும் நலத்தை
விந்தை பெறத் தந்தாண்டிடும் விரைவிற் பெருமானே.

கண்ணிற் கருமணியே சுவைக் கனியே திருவமுதே
விண்ணிற் கதிர் மதியாக விளங்கும் மணி விளக்கே
மண்ணில் உனை வாழ்த்துகின்றோர் வாழ்வே நவமணியே
எண்ணில் விளையாடல் செயும் எங்கள் பெருமானே.

இராஜ வாழ்த்து

சேவலாளி தேவ்ராஜன்—என்ற மெட்டு.

இராகம்-பார்ஸி நோட்—தாளம்-ஆதி.

ஆதிநாதன் தண்ணருளால் அரசர் கோமான் வாழ்கவே
தீதிலாத ராஜரீகச் செல்வன் என்றும் வாழ்கவே
மாதிறத்தோர் ஏத்தும் ஏழாம்எட்வர்ட் மைந்தர் வாழ்கவே
மேதினிக்குள் கீர்த்திபெற்ற வெற்றி வேந்தன் வாழ்கவே.

ராஜ ராஜர் போற்றுகின்ற நன்னிருபர் வாழ்கவே
ராஜநீதி மாறிடாத நமது மன்னர் வாழ்கவே
மாசிலாத ஜார்ஜ் சக்ரவர்த்தி நன்று வாழ்கவே
நேசியான மேரி ராணி நீடுவாழ்க வாழ்கவே.

தந்தையைப் போல் நம்மையென்றுந் தாங்குமகிபர் வாழ்கவே
செந்தமிழ்ச் செல்வந்தழைக்கச் செய்த செம்மல் வாழ்கவே
அந்தமுள்ள செல்வ மைந்தர் ஆசிபெற்று வாழ்கவே
இந்தியாவை யாளவந்த எங்கள் இறைவன் வாழ்கவே.

கற்பகத்தை யொத்திலங்கும் கருணை வள்ளல் வாழ்கவே
விற்பனத்தின் மிக்க வல்ல வீரசிங்கம் வாழ்கவே
நற்புகழ்விக் டோரியம்மை நாடும் பேரன் வாழ்கவே
முற்படத் துரைத்தனத்தார் முன்னும் சீலன் வாழ்கவே.

மாற்றம் ஒன்றில் லாமனத்தின் மாட்சியாளன் வாழ்கவே
ஏற்றம் ஒன்றும் வார்த்தைகொண்டி யம்பும்மூகன் வாழ்கவே
ஆற்றலோடு ஆட்சியோங்கி ஆயுள் நீடி வாழ்கவே
போற்றுகின்றோம் பாலர் நாங்கள் பூமிநாதன் வாழ்கவே.

உள்ளுறை

எண்	உட்பொருள்		பக்கம்
1.	நமது குடும்பம்	...	7
2.	கிராமம்	...	10
3.	நமது சக்ரவர்த்தி	...	12
4.	பகலும், இரவும்	...	14
5.	சிங்கம்	...	17
6.	சவுக்கு மரம்	...	19
7.	மழை	...	22
8.	தீபாவளிப் பண்டிகை	...	24
9.	வழி நடை வார்த்தைகள்	...	26
10.	திருவள்ளுவர்	...	28
11.	ஆலமரம்	...	31
12.	பஞ்சாயத்துக் கோர்ட்டு	...	33
13.	இருசொல் அலங்காரம்	...	37
14.	கற்றவரைப் பழிக்கலாகாது	...	38
15.	நெருப்பு	...	40
16.	விடுகதை (மதுரை)	...	43
17.	விடுகதை (ஐந்து விரல்கள்)	...	43
18.	நோயற்றவர் யார்? (பாட்டு)	...	44
19.	இடையனும் ஓநாயும்	...	45

எண்	உட்பொருள்	பக்கம்
20.	மைனு	... 47
21.	அன்னையைக் காத்த மைந்தன்	... 48
22.	வைசூரி (பாட்டு)	... 51
23.	யானை	... 54
24.	காகிதம்	... 57
25.	செய்யத்தகாதவை (பாட்டு)	... 59
26.	சித்திரக்கிரீவன் என்னும் புரு	... 60
27.	சுகாதாரப் பாட்டு	... 63
28.	எறும்பு	... 66
29.	கட்டளையைக் கடந்திலாதார் (பாட்டு)	... 69
30.	பிறருக்கு உழைப்பு (பாட்டு)	... 70
31.	கடவுள் செயல்	 74
32.	கொன்றைவேந்தன்	... 77

புதிய பிரதம பாடம்

மூன்றும் புத்தகம்



1. நமது குடும்பம்

1. பிள்ளைகளே! நாம் முன் இரண்டாம் புத்தகத்தில் ஒரு குடும்பம் என்பதைத் தெரிந்து கொண்டோம். இனி, இப்பாடத்தில் குடும்பத்தி லுள்ள சகலரையும் பற்றிப் படிப்போம்.

2. நம்மைப் பத்து மாதம் சுமந்து பெற்ற வர் தாய். நோய் முதலியன வராமல் நாளொரு

மேனியும் பொழுதொரு வண்ணமுமாய்க் கவனித்து வருகிறவரும் நமது தாய். நாவிற்கு உருசியாக வேண்டும் பதார்த்தங்களைச் செய்து கொடுத்து வளர்ப்பதும் நம் தாயே. அது பற்றியே 'தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை' எனக் கூறியிருக்கின்றனர்.

3. நம் தாய், நமக்குப் பண்டங்களைக் கொடுப்பதற்கு உதவியாயிருப்பவர் நம் தகப்பனர். நம் படிப்பில் மிக்க கவனம் செலுத்தி, நாம் சுத்தமாயிருக்கும்படி பார்ப்பவரும் நமது தகப்பனரே. 'திரைகடலோடியுந் திரவியம் தேடு' என்றபடி சகல கஷ்டங்களையும் பொருட்படுத்தாமல், குடும்பத்தின் முன்னேற்றத்தை உத்தேசித்துச் சம்பாதிப்பவரும் நம் தகப்பனர். அதனலேயே 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்று கூறப்பட்டிருக்கின்றது.

4. நம் கூடப் பிறந்த ஆண்களைச் சகோதரர்கள் என்றும், பெண்களைச் சகோதரிகள் என்றும் அழைப்போம். அதில், மூத்த ஆண்களை அண்ணன் என்றும், இளையவர்களைத் தம்பி என்றும் அழைக்கிறோம். அதுபோல, சகோதரிகளில் மூத்தவளுக்கு அக்காள் என்றும், இளையவளுக்குத் தங்கை என்றும் பெயர் வழங்குகின்றது.

5. நமது, தாய் அல்லது தகப்பனுரைப் பெற்றவர்களுக்குப் பாட்டி, பாட்டனுர் என்று பெயர். இன்னும், தாய் கூடப் பிறந்த சகோதரர் களை மாமன் என்றும், தகப்பன் கூடப் பிறந்த சகோதரிகளை அத்தை என்றும் கூறவேண்டும்.

6. சிற்றப்பன், பெரியப்பன் என்பவர்கள் தகப்பன் கூடப் பிறந்தவர்கள். தாயுடன் பிறந்த சகோதரிகளுக்குச் சிற்றன்னை அல்லது சிறியதாயார், பெரிய தாயார் என முறை செப்பவேண்டும்.

7. பாட்டன் அல்லது பாட்டி நம்மைப் பேரன் என்பார்கள். தங்கை அல்லது அக்காளைப் பேத்தி என்றும் கூப்பிடுவார்கள்.

'சுற்றத்தாரைப் போற்று'



2. கிராமம்

1. நாம் முன் இரண்டாவது வகுப்பிலேயே பல குடும்பங்கள் சேர்ந்து வாழும் இடத்திற்கு ஊர் அல்லது கிராமம் என்று படித்திருக்கிறோம். கிராமத்தில் அநேக வீடுகள் இருக்கின்றன. அதில் கூரை வீடுகளும், கட்டி மச்சு வீடுகளும் இருக்கின்றன. கிராமத்தைச் சுற்றிலும் வயல்கள் ஏராளமாய் உண்டு.

2. கிராமத்தில் நிலத்தீர்வை வசூல் செய்பவர்க்குக் கிராம முன்ஸீப் என்று பெயர். மற்றும் கணக்கப்பிள்ளை, நாட்டாண்மை, தோட்டி, காவற்காரன் முதலியவர்கள் கிராம முன்ஸீபின் கீழ்

வேலைக்காரர்கள். வரி வசூல் செய்தல், ஊரிலுள்ளவர்கள் சமாதானத்துடன் இருக்கும்படி கவனித்தல் முதலியன இவர்களின் வேலைகள்.

3. இக்கிராமத்தில் ஐந்நூறு வீடுகளுக்கு மேல் இருக்கின்றன. சுமார் மூவாயிரம் ஜனங்கள் இவ்வூரில் வசிக்கின்றனர். இந்த ஊரில் உயர்தரப் பள்ளிக்கூடம் ஒன்றும், கோவில்களும் இருக்கின்றன. ஜனங்கள் அதிகாலையிலெழுந்து வெளியில் சென்று காலைக்கடன்களை முடிப்பார்கள். பிறகு, கோவில்களில் சென்று கடவுளை வழிபடுவார்கள். கிராமத்தைச் சுற்றிப் பயிர்கள் வளர்ந்து பச்சையாய் இருக்கின்றன. தண்ணீர் எங்கும் நிரம்பியிருக்கின்றது. ஆனதால் இவ்வூர், ஜனங்கள் முகமலர்ச்சியுடன் வசிக்கிறார்கள்.

4. இவ்வூரில் விவசாயச் சங்கமும், ஐக்கிய நாணயச் சங்கமும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. விவசாயச் சங்கத்தில் சமுசாரிகளுக்கு வேண்டிய கலப்பை, உரங்கள் முதலியன கிடைக்கும். ஐக்கிய நாணயச் சங்கத்தின் விவசாயியின் சௌகரியத்தை முன்னிட்டுச், சொற்ப வட்டிக்குப் பணம் கொடுத்து உதவுகிறார்கள். இச்சங்கங்களினால் விவசாயிகள் மிகுந்த முன்னேற்றத்தையும், நன்மையையும் அடைகிறார்கள்.

'மேழிச் செல்வம் கோழை படாது'



3. நமது சக்ரவர்த்தி

1. இவர் நம்மை ஆளும் சக்ரவர்த்தி. இவர் பல அரசர்களுக்கு அதிபதி. ஆகையால் இவருக்குச் சக்ரவர்த்தி எனப் பெயர் உண்டாயிற்று. இவர் இங்கிலாந்து தேசத்திலுள்ள லண்டன் நகரத்தில் வசித்து வருகிறார். இவரது மனைவியின் பெயர் மேரி ராணி. இவர் காலஞ் சென்ற ஏழாவது எட்வர்ட் சக்ரவர்த்தியின் குமாரர். இவர், நம்மை முன்பு அன்புடன் ஆண்டு வந்த விக்டோரியா மஹாராணியின் பேரர்.

2. இவர் மிகவும் நல்லவர். இன்னும் இவரிடத்து அரசர்களுக்குரிய தயை, அன்பு, அடக்கம் முதலிய குணங்கள் நிரம்பியிருக்கின்றன. இவர் கப்பல் ஓட்டுவதில் மிகவும் சமர்த்தர். அத

ஞல் மூன்று முறை கப்பல் பந்தயத்தில் ஜெயம் பெற்றிருக்கிறர். இவர் மிகவும் இரக்கமுள்ளவர். அதுபற்றியே இவருக்கு இரக்கமுள்ள ஐந்தாம் ஜார்ஜ் அரசர் என்ற பெயரும் உண்டு.

3. இவர் வாலிபராக இருக்கும் பொழுது நம் இந்தியா தேசத்திற்கு வந்திருந்தார். அப்பொழுது நம்மைப் பார்த்து மகிழ்ந்து, தாம் அரசரானவுடன் வேண்டும் நன்மைகளைச் செய்வதாகவும் வாக்களித்தார். இவர் இரண்டாம் முறை நமது தேசத்திற்கு வந்தார். அச்சமயம் நமது தேசத்தின் தலைநகராகிய டில்லியில் 1911-ஆம் வருடம் டிசம்பர் மாதம் 12-ஆம் தேதி இவருக்கு முடிசூட்டு வைபவம் நடைபெற்றது.

4. அத்தினத்தின் அறிகுறியாக இன்றைக்கும் ஒவ்வொரு வருடம் டிசம்பர் மாதம் 12-ஆம் தேதி விடுமுறை ஏற்பட்டு வருகின்றது. அன்று பள்ளிக்கூடங்களுக்கும் விடுமுறை நாளாகும். பள்ளிக்கூடப் பையன்களுக்கு மிட்டாய், வாழைப்பழம், கற்கண்டு முதலியனவும் கொடுக்கப்படுகின்றது.

5. நமக்கு யாதொரு கஷ்டமும் வராமல் காக்கவேண்டியது அரசருடைய கடமை. அரசரின் கட்டளைப்படி நடக்கவேண்டியதும் நமது கடமை. அதனுலேயே அரசரையும் வணங்கத்

தக்கவர்களில் ஒருவராக கூறப்பட்டிருக்கின்றது. அரசர் ஆணையை நாம் மீறுதல் கூடாது. நமது அரசர் நமக்குப்பலவித நன்மைகளைச் செய்திருக்கிறார். கலாசாலைகள், ஆஸ்பத்திரிகள், நியாய விசாரணைக் கோர்ட்டுகள் முதலிய பல சௌகரியங்களை ஏற்படுத்தி இருக்கிறார்.

6. நமது சக்ரவர்த்தியின் மூத்த குமாரர் பெயர் ஆல்பர்ட் எட்வர்ட். இவர் வேல்ஸ் தேசத்திற்கு இளவரசர். இவரும் நமது சக்ரவர்த்தியைப்போல் மிகவும் சமர்த்தர். ஆகையால் நமக்கு வேண்டும் பலவித உதவிகளைச் செய்து வரும், அரசரின் குடும்பம் நீடூழி வாழக் கடவுளைத் துதிப்போமாக.

---

4. பகலும், இரவும்

1. நாம் பகலில் பள்ளிக்கூடம் சென்று வாசிக்கிறோம். சாயங்காலம் வீட்டிற்குத் திரும்பி வந்து விளையாடுகிறோம். சற்று நேரம் சென்றவுடன் இருட்டு ஏற்படுகிறது. அப்பொழுது இரவு நேரம் அல்லது இராக்காலம் என்கிறோம். பகலும் இரவும் உண்டாகிறதல்லவா! இவ்வாறு உண்டாகும் காரணத்தை அடுத்த பக்கத்தில் படித்துத் தெரிந்துகொள்ளுவோம்.

2. எப்படியெனில், ஒரு இருட்டறையில் மெழுகுவத்தி ஒன்றைக் கொளுத்தி வைத்துக் கொள். அதன் நேராக கயிற்றில் ஒரு பந்தைக் கட்டித் தொங்கவிடு. அக்கயிற்றின் நுனியைக் கட்டை விரலாலும், ஆள்காட்டி விரலாலும் சுற்றிக்கொண்டிரு. இப்பொழுது என்ன தெரிகிறது



என்று கவனி. பந்தின் ஒரு பாதி மேல், வெளிச்சம் படுகிறது. மற்றொரு பாதி இருட்டாக இருக்கிறது. பந்தைச் சுற்றிக்கொண்டே யிருந்தால் வெளிச்சமும் இருட்டும் மாறி மாறி வருகிறதல்லவா! இதனாலேயே நாம் வசிக்கும் இப்பூமி உருண்டையாய் இருக்கிறதென்று எண்ணவேண்டியிருக்கிறது.

3. சூரியன் நமக்கு வெளிச்சம் கொடுக்கிற தல்லவா? அச்சூரியனை மேற்சொன்ன மெழுகு வத்திக்குச் சமமாக வைத்துக்கொள். பூமியை, பந்திற்குச் சமமாக எடுத்துக்கொள். பூமி சுற்றினால் தான் வெளிச்சமும், இருட்டும் ஏற்படும். இதனால் பூமி தன்னைத்தானே சுற்றிக்கொள்ளுகிறது என்பது விளங்கும். அப்படி பூமி தன்னைச் சுற்றுவதுடன், சூரியனையும் சேர்த்துச் சுற்றிவருகிறது. பூமி சுற்றிவரும் பொழுது, சூரியன் எதிரில் வரும் பாகம் வெளிச்சமாகவும், மறையும் பாகம் இருட்டாகவும் ஏற்படுகிறது. வெளிச்சமான பாகத்திற்குப் பகல் என்றும் இருட்டான பாகத்திற்கு இரவு என்றும் சொல்லுகிறோம். இவ்வாறு பூமி இடைவிடாமல் சுற்றி வருவதால் இரவும், பகலும் மாறி மாறி வந்துகொண்டிருக்கின்றன. ஒரு இரவும், பகலும் வருவதற்குத் தினகதி என்று பெயர். ஒரு இரவும், பகலும் சேர்ந்து ஒரு நாள் எனப்படும்.



5. சிங்கம்

1. சிங்கம் பெரிய காடுகளிலும் மலை அடர்ந்த குகைகளிலும் வசிக்கும். நன்றாய் வளர்ந்த சிங்கம் ஐந்து அடி உயரமும் ஒன்பதடி நீளமும் இருக்கும். சிங்கம் மிகவும் கம்பீரமுள்ள தாயும் அழகுள்ளதாயும் இருக்கும். இது மற்ற மிருகங்களைக் காட்டிலும். பலமுள்ள ஜந்து. அத ஞல் இதற்கு மிருகேந்திரன் என்ற மற்றொரு பெயரும் உண்டு.

2. சிங்கத்திற்கு நான்கு கால்கள் உண்டு. கால்கள் பருத்து உறுதியான பாதங்களால் அமை யப்பெற்றிருக்கின்றன. இதன் பாதங்களில் கூர்

மையான நீண்ட நகங்கள் இருக்கின்றன. தன் நகங்களை வேண்டும்பொழுது நீட்டிக்கொள்ள முடியும்; வேண்டாதபொழுது உள்ளே சுருக்கிக் கொள்ளும்.

3. ஆண் சிங்கத்திற்குப் பிடரி மயிர் உண்டு. ஆனால், பெண் சிங்கத்திற்குப் பிடரி மயிர் கிடையாது. முகத்தில் மீசை மயிர் நீண்டிருக்கும். அதனால் தன்னுடைய வழியைத் தெரிந்து கொண்டு போகும். சிங்கத்திற்குப் பகல் நேரத்தைக் காட்டிலும் இரவில் கண் நன்றாகத் தெரியும். இம்மிருகம் பகல் முழுவதும் தன் குகையில் இருந்து, இரவில் இரைதேட வெளியே புறப்படும். அப்பொழுது தனக்கு எதிர் பட்ட மிருகங்களைக் கொன்று தின்னும். இது மாடு, ஆடு, மான் முதலிய மிருகங்களையே தனக்கு உணவாக உட்கொள்ளுகின்றது.

4. இம்மிருகத்திற்குப் பசியானவுடன் இரை ஒன்றும் அகப்படாவிட்டால் முகத்தைப் பூமியோடு வைத்துக் கர்ஜிக்கும். அக் கர்ஜனை மிகவும் பயத்தைக் கொடுக்கும். அக் கர்ஜனையைக் கேட்ட காட்டில் வசிக்கும் மற்ற மிருகங்களெல்லாம் பயந்து இங்கும் அங்கும் ஓடிப் பதுங்கும். சில மிருகங்கள் தப்பி சிங்கத்தினிடமே வழி தெரியாமல் வந்து சேரும். அப்பொழுது அவற்றின்மீது பாய்ந்து கொல்லும்.

5. சிங்கம் தனக்கு எதிர்ப்பட்ட மிருகங்களை எல்லாம் கொல்லாது. ஆனால் பசித்தால் மட்டுமே கொல்லும். பெண்சிங்கம் தடவைக்கு இரண்டு அல்லது மூன்று குட்டிகள் போடும். அக்குட்டிகளைப் பால் கொடுத்து வளர்க்கும். பழகிய சிங்கம், தன் எஜமானனிடத்தில் நாய் போல் இருக்கும். சிங்கத்தை வேடிக்கை காட்டுவதற்காகச் சர்க்கஸில் வைத்து வளர்க்கிறார்கள்.



6. சவுக்கு மரம்

1. பிள்ளைகளே! இதோ மேலே உள்ள படத்தைப் பாருங்கள். என்ன தெரிகிறது! ஒரு வகை மரங்கள் தெரிகிறதல்லவா! இம்மரங்களுக்குச் சவுக்கு மரங்கள் என்று பெயர். சவுக்கு மரம் சாதாரணமாக மணற்பாங்கான பூமிகளில்

நன்ருய்ச் செழித்து வளரும். இம்மரம் பெரும்பாலும் நீரோட்டமுள்ள ஆற்றங்கரை ஓரங்களில் பயிரிடப்படுகின்றது.

2. இம்மரத்தைப் பயிர் செய்ய விரும்புகிறவர்கள் முதலில் நாற்றுப் பாவவேண்டும். எந்த இடங்களில் இம்மரத்தை வைக்கவேண்டுமோ, அந்த இடத்தில் சிறு குழிகளை வெட்டவேண்டும். பின்பு, அந் நாற்றுகளை இக் குழிகளில் நட்டுக், கொஞ்சகாலம் வரை தண்ணீர் ஊற்றிக்கொண்டிருக்க வேண்டும். நாற்று முற்றிச் செடியாகும் வரை ஆடு, மாடு முதலிய கால் நடைகள் அழித்து விடா வண்ணம் பாதுகாக்கவேண்டும்.

3. இச்சவுக்கு நாற்று நட்டதிலிருந்து காலம் தவருமல் தண்ணீர் விட்டுக் கொண்டிருந்தால், சுமார் ஐந்து வருடங்களில் பெரிய மரங்களாகும். அம்மரங்கள் அநேகமாக அறுபது அல்லது எழுபது அடி உயரம் வரை செங்குத்தாக வளரும். இம்மரத்தின் இலைகள் ஊசிபோல் மெல்லியதாக இருக்கும். இதன் இலையினுல் அடித்தால் சாட்டை அடிபோல் இருக்கும்.

4. இம்மரம் மிகவும் உஷ்ணமானது. எளிதில் உலரக் கூடியது. அடுப்பில் வைத்தவுடன் தீப்பற்றிக்கொள்ளும் தன்மையுடையது. இது

மிகவும் இலேசானது. இம்மரம் உருண்டையாய் வளர்ந்துகொண்டே போகும். இம்மரத்தின் காய் உருண்டை வடிவமுள்ளதாகவும், முட்கள் போன்றும் இருக்கும்.

5. அநேகர் இச்சவுக்கு நாற்றுகளைத் தோட்டங்களுக்கு வேலிகளாக அமைத்து நடுவார்கள். அவைகள் மூன்று அல்லது நான்கு அடி வளர்ந்தவுடன் வெட்டி விடுவார்கள். பின்பு அவைகளிலிருந்து சிறு சிறு கிளைகள் அடர்த்தியாய் உண்டாகிப் பார்ப்பதற்கு அழகாய் இருக்கும். இம்மரத்தின் கட்டைகள் விறகுகளாக அடுப்பு எரிக்க உதவும். இம்மரத்தின் பட்டைகள் தகடுபோல் எடுக்கக்கூடியன. இம்மரத்தின் இலைகளைக் களர் நிலங்களில் போட்டுத் தண்ணீரைக் கட்டி வைத்தால் நிலத்தின் களர் மாறிவிடும். ஆனால் தண்ணீரில்லாமல் உலரவைத்து விட்டால் வேறு பயிர் ஒன்றும் முளைக்காது. இம்மரத்தின் பட்டையிலிருந்து ஒரு விதச் சாயம் உண்டாக்குகிறார்கள்.



7. மழை

1. நாம் வசிக்கும் இப்பூமியிலுள்ள சகல பிராணிகளும் உயிர் வாழ்வதற்கு முக்கிய ஆதார மாயிருப்பது தண்ணீரேயாகும். அத்தண்ணீர் நமக்கு எவ்வாறு கிடைக்கின்றது என்பதைப்பற்றித் தெரிந்துகொள்ளுவோம்.

2. அநேகமாக நீங்கள் எல்லோரும் வீட்டில் சோறு சமைப்பதைப் பார்த்திருக்கலாம். என்ன செய்கிறார்கள் ? ஒரு பாத்திரத்தில் தண்ணீர் விட்டு அடுப்பிலேற்றித் தீ மூட்டுகிறார்கள். சற்று நேரமானவுடன் பாத்திரத்தில் இருந்த தண்ணீர் சூடுண்டாகி, ஆவியாகி புகைபோல வருகிறது. உலை மூடியினால் பாத்திரத்தைச் சற்று நேரம் மூடிவிடவும். பின்பு மூடியை

எடுத்துப் பார்த்தால் சிறு நீர்த்துளிகள் சொட்டிக் கொண்டிருக்கும்.

3. அதுபோல, ஆறு, குளம், சமுத்திரம் முதலியவற்றிலுள்ள தண்ணீர் சூரிய வெப்பத்தினால் சூடாகிறது. சூடானவுடன் ஆவியாகி மேலே கிளம்புகிறது. மேலே கிளம்பிய ஆவிகள் ஒன்று சேர்ந்து மேகங்களாகிறது. அம்மேகங்கள் இங்கும் அங்கும் சஞ்சரித்துக்கொண்டிருக்கும். அவ்வாறு அலையும் மேகங்களின்மேல் குளிர் காற்றுப் பட்டவுடன் மழையாகப் பெய்கிறது.

4. மழை பெய்தவுடன் தண்ணீர் எல்லாம் ஒன்று சேர்ந்து மேடு பள்ளங்களில் ஓடுகிறது. பள்ளங்களில் தங்கிய தண்ணீர் சாகுபடிக்கு உபயோகமாகிறது. உலகத்தில் மழை பெய்யாவிடில் தான தருமங்கள் கிடையாது. பஞ்சம் நேரிடும். அதனால் கொலை, களவு ஏற்படும். அது பற்றியே 'வானம் சுருங்கில் தானம் சுருங்கும்' என்றும் 'மாரியல்லது காரியமில்லை' என்றும் கூறியிருக்கின்றனர்.



8. தீபாவளிப் பண்டிகை

1. நாம் பிரதி வருடம் ஐப்பசி மாதம் ஒரு நாள் அதிகாலையில் எழுந்து எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்தது ஞாபகமிருக்கலாம். அன்று புதிய உடைகளையும் உடுத்தினோமல்லவா? அத் தினத்திற்குத் தீபாவளிப் பண்டிகைத் தினம் என்று பெயர். அத் தீபாவளிப் பண்டிகை எப்படி ஏற்பட்டதென்று வாசித்து அறிவோம்.

2. முன் ஒரு காலத்தில் அசுரன் ஒருவன் இருந்தான். நரகாசுரன் என்பது அவன் பெயர். அவன் மிகுந்த தெய்வபக்தி உள்ளவன். மிகவும் பராக்கிரமசாலி. அதனால் தன்னை நிகர்த்தவர் ஒருவரும் இல்லை எனக் கர்வங்கொண்டான். கர்வத்தினால் ஒருவரையும் மதிப்பதில்லை. பூமியில் வாழும் சகல மனிதர்களையும், ரிஷிகளையும்

அலட்சியமாக எண்ணினான். இடையூறுகளும் செய்துகொண்டு வந்தான். ஆனால் எல்லாரும் கொஞ்ச நாள் இம்சையைப் பொறுத்துப் பார்த்தார்கள். இம்சை நின்றபாடில்லை. கடைசியில் எல்லாரும் ரிஷிகளிடம் சென்று முறையிட்டனர். ரிஷிகளும், கடவுளிடம் தங்கள் துன்பங்களைச் சொல்லி முறையிட்டனர். கடவுளின் அவதாரமான மகாவிஷ்ணுவும் அவர்கள் முன்தோன்றி, 'என்ன சங்கதி' என்று வினவினர்.

3. அதற்கு ரிஷிகள், 'ஐயனே! எங்களால் நரகாசுரனுடைய இம்சையைச் சகிக்கமுடியவில்லை. மேலும் அவன் மிக்க பராக்கிரமசாலியாகவும், தெய்வ பக்தியுள்ளவனாகவும் இருக்கிறான். 'துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலனம்' தங்களுடையதே. ஆகையால் எங்களை இவ்வாபத்தினின்றும் தப்புவிப்பது தங்களுடைய கடமை. எங்களைக் காத்தருளும் என ஓலமிட்டனர். அதுகேட்ட மகாவிஷ்ணுவும் இரக்கங் கொண்டார். அவர்களைக் காப்பதாகவும் வாக்களித்தார். அவ்வாறே ஐப்பசி மாதம் சதுர்த்தசி அன்று, நான்காம் ஜாமத்தில் அந்நரகாசுரனை வதைத்தார்.

4. அந்த அசுரன் சாகுந்தருவாயில் மகாவிஷ்ணுவை நோக்கினான். அதற்கு அவர், 'என்ன வேண்டும்' என்று கேட்டார். 'சுவாமி

நான் இறப்பதைப்பற்றி ஒன்றும் வருந்தவில்லை. ஆனால் இறக்கும் இத்தினத்தை ஒரு நல்ல நாளாகக் கொண்டாடவேண்டும். ஆகையால் இப் பூமியில் உள்ள சகல மனிதர்களும் நான் இறந்த தினத்தன்று எண்ணெய் ஸ்நானம் செய்யவேண்டும். புது ஆடை ஆபரணங்கள் அணிந்து, பலகார வகைகளுடன் சந்தோஷமாகச் சாப்பிடவேண்டும். இதுதான் நான் கேட்கும் கடைசிவார்த்தை, என்று சொன்னான்.

5. மகாவிஷ்ணுவும் அப்படியே வரங் கொடுத்து மறைந்தார். அன்று முதல் நரகாசுரன் கேட்டுக்கொண்ட ஞாபகமாக நாம் எண்ணெய் ஸ்நானம் செய்து, புது உடைகள் உடுத்தி, பலகாரங்கள் சாப்பிடுகிறோம். அவன் சதுர்த்தசி அன்று இறந்ததால் நரகசதுர்த்தி என்றும் தீபாவளி என்றும் கொண்டாடுகிறோம்.

---

9. வழி நடை வார்த்தைகள்

நீ எங்கே போனாய்? ஊருக்குப் போனேன்.
என்ன ஊர்? மைலாப்பூர்.
என்ன மயில்? காட்டு மயில்.
என்ன காடு? ஆற்காடு.
என்ன ஆறு? பாலாறு.

என்ன பால்?	கள்ளிப் பால்.
என்ன கள்ளி?	இலைக்கள்ளி.
என்ன இலை?	வாழை இலை.
என்ன வாழை?	கற்பூரவாழை.
என்ன கற்பூரம்?	ரச கற்பூரம்.
என்ன ரசம்?	மிளகு ரசம்.
என்ன மிளகு?	வால்மிளகு.
என்ன வால்?	நாய் வால்.
என்ன நாய்?	மர நாய்.
என்ன மரம்?	பலா மரம்.
என்ன பலா?	வேர்ப் பலா.
என்ன வேர்?	வெட்டி வேர்.
என்ன வெட்டு?	பனை வெட்டு.
என்ன பனை?	தாளிப்பனை.
என்ன தாளி?	விருந்தாளி.
என்ன விருந்து?	மண விருந்து.
என்ன மணம்?	பூ மணம்.
என்ன பூ?	மாம்பூ.
என்ன மா?	அம்மா.

10. திருவள்ளுவர்

1. வடக்கே மைலாப்பூர் என்பது ஒரு ஊர். அவ்வூர் சென்னை நகரில் உள்ளது. அவ்வூரில் முன் காலத்தில் திருவள்ளுவர் என ஒருவர் இருந்தார். அவர் கல்வி, அறிவு முதலியவற்றில் மேலானவர். தமிழ்ப் பாஷையில் வல்லவர்.

2. அவருடைய மனைவியின் பெயர் வாசுகி. அவர் தமிழர் அனைவருக்கும் பயன் படும்படி ஒரு புத்தகம் எழுதினர். அப்புத்தகத்திற்குத் திருக்குறள் என்று பெயர். அத் திருக்குறளில் மனிதர்க்கு உரிய சகல சட்டங்களும் விளக்கி எழுதப்பட்டிருக்கின்றன. ஆகையால் எல்லாரும் அப்புத்தகத்தை வேதப்புத்தகமாகக் கொண்டாடி வருகிறார்கள்.

3. அவர் காலத்தில் தெற்கே மதுரை என்று ஒரு நகரம் இருந்தது. அம்மதுரையே இன்றும் ஒரு பெரிய நகரமாக சிறந்து விளங்கு கிறது. அம்மதுரையில் சங்கம் ஒன்று இருந் தது. அச்சங்கத்தில் பல புலவர்கள் இருந்தார் கள். அப் புலவர்களிடம் ஒரு பலகை உண்டு. அப்பலகை தெய்வத் தன்மை பொருந்தியது. அது பொற்றாமரை என்னும் குளத்தில் மிதந்து கொண்டிருந்தது. அக்குளம் மதுரைக்கோவிலில் உள்ளது.

4. அப்பலகை படித்தவர்களுக்கு மட்டுமே இடம் கொடுக்கும். மற்றவர்களுக்கு இடங்கொடாமல் சுருங்கிக்கொள்ளும் தன்மையுடையது. இவற்றைக் கேட்ட திருவள்ளுவர் தமது புத்தகத்துடன் மதுரைக்கு வந்தார். புலவர்களைக் கண்டார். ஆனால் புலவர்கள் அவரை மதிக்கவில்லை. தாகு



கவே புலவர்களிடம் போய், 'நான் ஒரு நூல் செய்திருக்கின்றேன். அதனைத் தாங்கள் பார்க்க வேண்டும்' என்ருர். புலவர்கள் மதியாமல் அசட்டையாய் இருந்தார்கள். மறுபடியும் பார்க்கும்படி வேண்டிக்கொண்டார்.

5. அதற்குப் புலவர்கள், 'ஐயா! உமது புத்தகத்தை இச் சங்கப்பலகையில் வையுங்கள்.

பலகை இடங்கொடுத்தால் பிறகு நாங்கள் பார்க்கிறோம்' என்றனர். திருவள்ளுவரும் அவ்வாறே வைத்தார். வைத்தவுடன் அப்பலகை அப்புத்தகத்திற்கு மட்டும் இடங் கொடுத்தது. உட்கார்ந்திருந்த மற்றப் புலவர்கள் எல்லாரும் பொற்றாமரையில் விழுந்தனர். பின்பு புலவர்கள் நீந்திக் கரை சேர்ந்தனர். திருவள்ளுவரை அவமதித்ததற்காக வருந்தினர். மன்னிக்குமாறும் கேட்டுக் கொண்டனர்.

6. அது முதல் புலவர்கள் எல்லாரும் திருவள்ளுவரைப் புகழ்ந்தனர். அப்புத்தகத்தையும் முதன்மையாகக் கொண்டாடினர். திருவள்ளுவரும் புலவர்களில் ஒருவராக விளங்கினர். இத் திருக்குறள் இப்பொழுது எல்லாப் பாஷைகளிலும் அச்சிட்டுக் கொண்டாடப்படுகின்றது.

7. பிள்ளைகளே! திருவள்ளுவரை எல்லாரும் கொண்டாடக் காரணம் என்ன? கல்வியினுல் அல்லவா! ஆதலால், நாமும் நன்ருய்ப் படித்து மேன்மை யடையவேண்டும்.

11. ஆலமரம்

1. இப்பூமியில் அநேக வகை மரங்கள் இருக்கின்றன. அம்மரங்களிலெல்லாம் மிகவும் பெரியது ஆலமரம். ஆலமரம் அடர்ந்து விசாலமாய் பரவி இருக்கும். இதன் அடிமரம் பருத்து இருக்கும். இம்மரத்திற்குக் கிளைகள் அதிகம்.

2. ஆலமரத்தின் பெரிய கிளைகளிலிருந்து விழார்கள் தொங்கும். அவற்றிற்கு விழுதுகள் என்று பெயர். இவ்விழுதுகள் நாளடைவில் பெரிதாகிப் பூமியில் வந்திறங்கி வேரூன்றி மரமாகின்றன. ஒரு கட்டிடத்திற்குத் தூண்கள் போன்று ஆலமரத்திற்கு விழுதுகள் தூண்போல் இருக்கின்றன.

3. இம்மரத்தின் பழங்கள் சிவப்பாக இருக்கும். அப்பழங்களில் விதைகள் நிறைந்து இருக்கும். அவ்விதைகள் தண்ணீரில் வாழும் சிறிய மீனின் முட்டையைக் காட்டிலும் சிறியவை. ஒரு சிறிய விதையினுல் எவ்வளவு பெரிய மரம் முளைக்கின்றது பாருங்கள்! கடவுளினுடைய மகிமையினுலல்லவா! ஆலமரத்தின் இலைகள் நெருங்கியிருப்பதால் அம்மரத்தின் நிழல் மிகவும் குளிர்ச்சியாய் இருக்கும். சாலையில் நடந்து போகும் வழிப்போக்கர்கள் தங்கள் களைப்பைத் தீர்த்துக் கொள்ள, இம்மரத்தின் நிழலில் தங்கிப்போவார்கள். ஒரு அரசன் தன் பரிவாரங்களுடன் ஆலமரத்தின் நிழலில் தங்கலாம்.

4. ஆலமரம், பக்ஷிகளும், குரங்குகளும் வசிப்பதற்கு உதவுகின்றது. இம்மரத்தினடியில் ஏழைகளும், பிச்சைக்காரர்களும் வாசஞ் செய்வதுண்டு. ஆலிலையைத் தைத்து, அதில் உணவையிட்டுச் சாப்பிடலாம். ஆடுகள் தின்பதற்கும் உபயோகமாகின்றது. இலைகள் பழுத்தவுடன் வெய்யிலில் உலர்த்தி அடுப்பு எரிக்கலாம். கிளைகளும் விறகாக உபயோகப்படும். இம்மரத்தின் கிளையை வெட்டி, பூமியில் நட்டால் சிறிது நாளில் தளிர்த்து முளைக்கும். சாலைகளில் இம்மரக்கிளைகளை நட்டு வைத்தால் வழிப்போக்கர்களுக்கு

நிழல் தரும். இம்மரத்தின் விழுதுகளை சிறு குச்சிகளாக நறுக்கி பல் தேய்க்கலாம். பற்களும் கெட்டியாகும். அதனாலேயே 'ஆலும் வேலும் பல்லுக்குறுதி' என்று கூறியிருக்கின்றனர்.

---

12. பஞ்சாயத்துக் கோர்ட்டு

1. ஒரு நாள் இரண்டு சகோதரர்கள் மாலையில் வெளியில் உலாவச் சென்றார்கள். திரும்பி வரும் பொழுது இரண்டு பேருக்கும் சம்பாஷணை ஏற்பட்டது.

தம்பி:—அண்ணா! நேற்று நம்முடைய அண்டை வீட்டுக்காரனுக்குப் பஞ்சாயத்துக் கோர்ட்டில் ஏதோ அபராதம் விதித்தார்களாமே! அது என்ன? பஞ்சாயத்துக் கோர்ட்டு என்றால் எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. உனக்கு அதைப்பற்றி ஏதாவது தெரியுமா?

அண்:—தம்பி! நீ முன் பாடத்தில் நமது அரசரைப்பற்றியும், அவர் அரசாட்சி புரியும் திறமையைப்பற்றியும் படித்தாயல்லவா! அந்த அரசாட்சியின் நன்மையில் கிராமப் பஞ்சாயத்துக் கோர்ட்டும் ஒன்று. நமது அரசர்

ஒருவரே எல்லாக் காரியத்தையும் கவனிப்ப தென்றால் முடியாது. அதற்காகீத் தனித் தனியே பிரித்து ஜனங்களுக்குள் ஏற்படும் குறைகளை நீக்கிக்கொள்ளும்படி ஏற்பாடு செய்திருக்கிறார்கள். பஞ்சாயத்துக் கோர்ட்டு கள் அநேகமாக ஒவ்வொரு கிராமங்களிலும் இருக்கும். கிராமத்தில் ஏற்படும் சிறு வழக்கு களை, அக்கிராமத்தார்களே தீர்த்துக்கொள்ளு வார்கள்.

தம்பி:—அண்ணா! கிராமத்திலுள்ள எல்லா மனிதர் களும் எப்படித் தீர்த்துக் கொள்ளுவார்கள். எல்லா மனிதர்களும் சேர்ந்தால் பெரிய கூட்ட மாகிவிடுமே. அப்பொழுது யாருடைய பேச் சைக் கேட்பார்கள்?

அண்:—தம்பி! கிராமத்திலுள்ள எல்லா ஜனங் களும் சேரமாட்டார்கள். ஆனால் எல்லா ஜனங்களும் சேர்ந்து சில முக்கியமான பெரிய மனிதர்களைத் தேர்ந்தெடுப்பார்கள். அப்படித் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள் செல்வாக்கு உள்ளவர்களாகவும், நியாயம் வழங்குபவர்க ளாகவும் இருப்பார்கள். அவர்கள் பொறுமை, தயை முதலியன நிரம்பப் பெற்றும் இருப் பார்கள்.

தம்பி:—அண்ணு! சில மனிதர்களைத் தேர்ந்தெடுப்பார்கள் என்று சொன்னீர்களே. அப்படியானல் எவ்வளவு பெயர்கள் இருப்பார்கள் ?

அண்:—தம்பி! கிராமத்தின் விஸ்தீரணத்திற்குத் தக்கபடி ஐந்து முதல் இருபது பெயர்கள் வரை ஜனங்கள் தேர்ந்து எடுப்பார்கள். அப்படித் தேர்ந்தெடுத்தவர்களுக்கு மெம்பர்கள் என்று பெயர். இம்மெம்பர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து தங்களுக்குள் ஒருவரைத் தலைமையாகத் தேர்ந்து எடுத்துக் கொள்ளுவார்கள். அவருக்குப் பிரஸிடெண்டு என்று பெயர். இம்மெம்பர்கள் கிராமத்திலுள்ள சாவடி அல்லது சில பொது இடங்களில் கூட்டம் கூடுவார்கள். அநேகமாக இவர்கள் வாரம் ஒரு முறை அல்லது இரு முறை ஒன்று சேருவார்கள்.

தம்பி:—அண்ணு! இம்மெம்பர்களெல்லாம் எதற்காக ஒன்று சேருகிருர்கள்? இதனுல் நமக்கு என்ன பிரயோஜனம்?

அண்:—தம்பி! கிராமத்திலுள்ள ஜனங்களுக்குள் ஏதேனும் சண்டை, சச்சரவு ஏற்பட்டால் இவர்களே விசாரிப்பார்கள். விசாரித்து, குற்றம் செய்தவர்களைத் தண்டித்தும், அபரா

றும் விதித்தும் நியாயம் வழங்குவார்கள். அதனுல் கிராமத்திலுள்ள ஜனங்கள் எல்லா ரும் தங்களுக்குள் சண்டை ஒன்றுமில்லாமல் ஒற்றுமையுடன் வாழ்வார்கள். நம்முடைய அண்டை வீட்டுக்காரன் எதிர் வீட்டுக்கார னேடு நேற்று சண்டை பிடித்துக்கொண்ட தனுல் தான் அபராதம் விதித்தார்கள்.

தம்பி:—அண்ணு! இப்பொழுது கிராமப் பஞ்சா யத்துக் கோர்ட்டைப்பற்றி நன்ருய்த் தெரிந்து கொண்டேன். நாமும் படித்து பெரிய மனி தர்களாகி எல்லா ஜனங்களுக்கும் நன்மை செய்யவேண்டும். இவ்வளவு நன்மைகளைச் செய்த நமது அரசாங்கத்தார் நீடூழி வாழக் கடவுளைத் துதிப்போமாகவும்.

13. இருசொல் அலங்காரம்.

எருக்க இலை பழுப்பதேன்
எருமைக் கன்று சாவதேன் } பால் அற்று

ஆலிலை பழுப்பதேன்
இராவழி நடப்பதேன் } பறிப்பார் அற்று

ஒருமா முக்காணி ஆவதேன்
ஒத்து உண்டு உலகில் திரிவதேன் } காணியில்லாமல்

கயிறு முறுக்கு ஏறுவதேன்
கல்வி என்றும் சிறப்பதேன் } நூலைக்கொண்டு

காவன்னா கோவன்னா ஆவதேன்
காளைமாடு பாய்வதேன் } கொம்பினால்

கோட்டைக் கதவு திறப்பதேன்
நாட்டில் தெண்டம் இருப்பதேன் } சாவியினால்

சிறிய ஊர் பட்டணம் ஆவதேன்
வெறியர் மயங்கித் திரிவதேன் } குடியேறி

தனம்தேடி உண்ணாமல் புதைப்பதேன்
தாரணியில் அமரபக்ஷம் ஆவதேன் } மதி குறைந்து

மேதினி எங்கும் செழிப்பதேன்
மெய் எல்லாம் கொப்பளிப்பதேன் } மாரியினால்

முக்கால் பணம் முழுப்பணமாவதேன்
நொண்டி ஆடு தண்ணீர் குடிப்பதேன் } கால் கூடி

நொண்டி நடந்து போவதேன்
மண்டி நெல் அளப்பதேன் } மரக்காலினால்

14. கற்றவரைப் பழிக்கலாகாது

1. தமிழ் நாட்டில் மதுரை என்பது ஒரு பழைய பட்டினம். அம்மதுரையை முன்காலத்தில் பாண்டிய மன்னன் ஒருவன் ஆண்டு வந்தான். அம்மன்னன் தமிழ்ப் பாஷையில் மிக்க விருப்பமுள்ளவன். அதனால் தமிழை விருத்தியாக்க எண்ணி, சங்கம் ஒன்றை ஏற்படுத்தினான். சங்கம் என்பதற்குக் கூட்டம் என்று அர்த்தம். அச்சங்கத்தில் பல படிப்பாளிகள் இருந்து வந்தனர். அவர்களில் தலை சிறந்து விளங்கினவர் நக்கீரர் என்பவர்.

2. நக்கீரர் மிகவும் அறிவுடையவர். அதனால் எல்லாரும் அவரிடம் மரியாதை காட்டி வந்தார்கள். அக்காலத்தில் குயக்கோடன் என்ற ஒரு புலவனும் இருந்து வந்தான். இவன் வடமொழிப் பாஷையில் வல்லவன். தன் பாஷையைப் பற்றியே எந்நேரமும் புகழ்ந்து கொள்ளுவான். தமிழைப்பற்றி இழிவாகக் கூறிக்கொண்டு வந்தான். நக்கீரர் புகழைப்பற்றி கர்வங் கொண்டான். தன்னிடம் வருகிற புலவர்களிடம் நக்கீரரைப்பற்றியும், தமிழ்ப் பாஷையைப் பற்றியும் இழிவு கூறிக்கொண்டு வந்தான். இவற்றைக் கண்ட சில புலவர்களுக்குக் குயக்கோடனிடம் வெறுப்பு ஏற்பட்டது. சில நாள் பொறுத்துப் பார்த்தனர். அவற்றிலும் நின்ற பாடில்லை.

3. கடைசியில் புலவர்கள் நக்கீரரிடம் சென்று, 'சுவாமி! குயக்கோடன் பொருமையை நாங்கள் சகிக்க முடியவில்லை; எந்நேரமும் தங்களையும், தமிழையும் இழித்துப் பேசிக்கொண்டிருக்கிருன்; தங்களைப் பேசுவதைக்கூட நினைக்கவில்லை; தமிழைக் குறை கூறுகின்ருன்' என்றனர். இவ்வார்த்தைகளைக் கேட்ட நக்கீரருக்கு வருத்தம் உண்டாயிற்று. அவனுடைய கர்வத்தை அடக்க எண்ணினுர். எவ்வளவோ முயன்றும் குயக்கோடனுடைய கர்வம் அடங்கவில்லை. கடைசியில் நக்கீரர் குயக்கோடன் சாகும்படி ஒரு பாட்டுப் பாடினுர். குயக்கோடனும் இறந்தான். இவற்றையெல்லாம் குயக்கோடனுடைய சிஷ்யர்கள் பார்த்தார்கள். தங்கள் குரு இறந்ததைப்பற்றித் துக்கம் கொண்டார்கள்.

4. அப்புலவர்கள், பின்பு நக்கீரரிடம் சென்றனர். சென்று, 'புலவீர்! குயக்கோடனுடைய கர்வம் அடக்கியதைப்பற்றி சந்தோஷம். ஆனுல் இவ்வளவு பெரிய தண்டனை கூடாது. தயவு செய்து மறுபடியும் எழுப்பித்தரவேண்டும்' என்று வேண்டினர். நக்கீரரும் அப்படியே எழுப்பினுர். குயக்கோடன் தூங்கி விழித்தவனைப்போலக் கண்ணைக் கசக்கிக்கொண்டு எழுந்தான். எழுந்ததும் நக்கீரர் காலில் விழுந்து வணங்கினுன். தன்னைக்

காத்தருளும்படி வேண்டி நின்றான். நக்கீரரும் அவனுக்கு புத்திமதி கூறி அனுப்பினார். அவ்விடமிருந்த எல்லாரும் ஆச்சரியமுற்றனர். நக்கீரர் பெருமையை மெச்சினர்.

---

15. நெருப்பு

1. நம்மைச் சுற்றிலும் வாயு சூழ்ந்து கொண்டிருக்கிறது. வாயுக்களில் அநேக வகை உண்டு. அவை பிராணவாயு, கரியமலவாயு என்பனவாம். இதில் பிராணவாயு மிக்க அவசியமானது. பிராணவாயு இல்லாவிடில் பிராணிகள் உயிர் வாழ முடியாது நெருப்பு எரிவதற்குப் பிராணவாயு இன்றியமையாதது.

2. உலகில் எவ்வளவோ பொருள்கள் இருக்கின்றன. அவற்றில் கட்டை, கரி, பஞ்சு, எண்ணெய் முதலியவைகள் நெருப்புப்பற்றி எரியக்கூடியவை. கல், மண், தண்ணீர் இவற்றில் நெருப்புப் பற்றாது. நெருப்பு என்பது தனிப்பொருள் அல்ல. ஒரு விதக் கலப்பினால் உண்டாகும் உஷ்ணமே நெருப்பு. உஷ்ணம் அதிகரித்தால் வெளிச்சம் உண்டாகும்.

3. முற்காலத்தில் மனிதர்கள் நெருப்பு உண்டாக்கும் விதத்தைத் தெரியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்கள். ஆனால் காற்றின் அசைவினால் மரங்கள் ஒன்றோடொன்று மோதித் தீப்பற்றிக்கொள்ளும். கற்களும் ஒன்றின்மேல் ஒன்று விழும்பொழுது வெளிச்சம் உண்டா



வதைப் பார்த்தார்கள். நாளடைவில் சிக்கிமுக்கிக் கற்களின் இடையில் பஞ்சை வைத்து நெருப்புப் பிடிக்கும்படி கற்றுக்கொண்டார்கள். நெருப்புப் பிடித்த பஞ்சை எரு மூட்டம் போட்டு, தீயைப் பத்திரப்படுத்தி வந்தார்கள். இவ்வாறு நெருப்பு அணையாமல் காலம் போக்கினார்கள்.

4. இக்காலத்தில் நாம் நெருப்பு உண்டாவதற்கு என்ன செய்கிறோம்! இலேசாகக் கடை

யில் தீப்பெட்டியை வாங்கிவந்து நெருப்பு உண்டாக்கிவிடுகிறோம். நெருப்புப் பெட்டியில் சிறிய குச்சிகள் அடங்கியிருக்கின்றன. அக்குச்சிகளின் நுனியில் சிவப்பு அல்லது கருப்பு நிறமுள்ள பொருள் ஒட்டிக்கொண்டிருக்கிறது. அவை கந்தகம் முதலிய சில மருந்துகள் சேர்ந்த குழம்பில் தோய்த்து எடுக்கப்பட்டிருக்கின்றன. அதனைப் பெட்டியில் உராய்ச்சினவுடன் நெருப்புப்பற்றி எரிகிறது. நெருப்பு மிகவும் உஷ்ணமான பொருள் நெருப்பைத் தொட்டால் சுடும்.

5. நெருப்பு நமக்குப் பலவகைகளிலும் உபயோகப்படுகின்றது. நாம் சாப்பிடும் ஆகாரம் முதலியவை சமைப்பதற்கும், இருட்டில் வெளிச்சத்திற்கும் நெருப்பு வேண்டும். புகைவண்டி, நீராவிக்கப்பல் முதலிய இயந்திரங்கள் ஓடுவதும் இந்நெருப்பினாலேயே. இரும்புவேலை, பொன் வேலை செய்கிறவர்களுக்கும் நெருப்பு அவசியம்.

6. நெருப்பின் பக்கத்தில் நாம் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும். இல்லாவிடில் நெருப்புப் பற்றிக்கொள்ளும். அப்படிப் பற்றிக்கொண்டால் உடனே திகைத்து ஓடலாகாது. தீயின் சுவாலை மேல் நோக்கியே வரும். ஆகையால், உடனே தரையிற்படுத்துப் புரளவேண்டும், அல்லது கம்

பளியை எடுத்துப் போர்த்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு செய்தால் ஆபத்தினின்றும் தப்பித்துக் கொள்ளலாம்.

---

16. விடுகதை (மதுரை)

முன்னொரு ஊரின் பேராம்
முதல் எழுத்து இல்லாவிட்டால்
நன்னகர் மன்னர் பேராம்
நடு எழுத்து இல்லாவிட்டால்
கன்னமாம் விலங்கின் பேராம்
கடை எழுத்து இல்லாவிட்டால்
உன்னிய தேனின் பேராம்
உரைப்பீர் இவ்வூரின் பேரே.

---

17. விடுகதை (ஐந்து விரல்கள்)

ஐவர் உடன் பிறந்தான் தருமன் அல்ல
அதில் ஒருவன் சாட்சி சொல்வான் மனிதன் அல்ல
தன் சுவையைத் தான்சுவைப்பான் ஞானி அல்ல
தரணி எங்கும் புல் சுமப்பான் சண்டாளன் அல்ல
கன்னியரை மணம் புரிவான் கடைசித் தம்பி
கண்டுசொல்வோன் இக்கதையைக் கடவுளாமே.

---

18. நோயற்றவர் யார்?

ஏற்ற புதன்சனியில் எண்ணெய் இட்டே முழுகி,
காற்றுபனி வெய்யில் காயார்கள் மெய்வருந்தார்;
ஓயா வழிநடக்கார், உண்டு பலகால்விரும்பார்;
காயாவது கிழங்கு கனியும் மிகத்தின்னார்கள்;
மலம்நீர் அடக்கார்கள்; மடப்பளியிலே அருந்தார்;
நலமாய்ப் பழங்கறியை நாடார்; பலநாளும்
காய்ச்சுபால், நெய், மோர் எக்காலமும் தான்சேர்ப்பார்;
எச்சில்லா வழுக்கை இளநீர் மிகுந்து உண்பார்;
ஆறுதிங்கட் கொருதரந்தான் ஆனவிரோசனங் கொள்வார்;
சோறுஉண்டபின் உலாவி தூயநீர் அருந்திடுவார்;
உண்டபின் மூழ்காதார்; உறக்கம் மிகக்கொள்ளாதார்
மண்டும் இரவில் தயிரை வார்த்துப் புசியாதார்;
பருத்தசுமை எடுக்காதார்; பல்உணவு புசித்திடுவார்;
வருத்தும் விசாரமில்லார்; நற்காற்று வாங்கிடுவார்;
மாறுபாடு இல்லாமல் வயிறு அறிந்து உண்பவர்க்கு
நூறுவரை உடலினில் நோய் அணுகமாட்டாதே.



19. இடையனும் ஓநாயும்

1. ஒரு ஊரில் ஓர் இடையன் அநேக ஆடுகளை வளர்த்து ஜீவனம் செய்து வந்தான். அவன் தினந்தோறும் ஆடுகளை மந்தையாக ஓட்டிக் காட்டில் மேய்த்து வருவான். இரவில் ஓரிடத்தில் அடைத்து வைப்பது வழக்கம். அக்காட்டில் ஒரு ஓநாயும் வசித்து வந்தது. ஓநாய் ஆட்டின் பகைவன் அல்லவா? ஆயினும், அந்த ஓநாய் தினந்தோறும் இரவில் இடையனிடம் வந்து, மந்தையைக் கவனித்து வந்தது.

2. இவ்வாறு சில நாட்கள் சென்றன. ஓநாயும் வழக்கம்போல் தன்னுடைய வேலையைச் செய்து வந்தது. இடையனுக்கு ஓநாயின்மீது

நம்பிக்கை ஏற்பட்டது. 'ஓநாய் ஆட்டின் பகை வனுக இருந்தும், இவ்வளவு அன்புடன் இருக் கின்றதே' என்று ஆச்சரியமும் கொண்டான். நாளடைவில் இடையனுக்கு ஓநாயினிடம் அதிகப் பிரியம் உண்டாயிற்று. ஓநாயை நம்பி வெளியில் போய் வருவதுமாக இருந்தான்.

3. இஃது இவ்வாருக, இடையன் ஒரு ஊருக் குப் போகவேண்டியதாயிற்று. தன்னுடைய மந் தைக்குக் காவலாக வேறு ஒருவரும் கிடைக்கவில்லை. ஓநாயையே காவலாகவைக்க எண்ணங்கொண்டான். அப்படியே ஓநாயைக் காவலாக வைத்துவிட்டு ஊருக்குச் சென்ருன். இடையன் ஊர் சென்றதும் ஓநாய் தினந்தோறும் ஆட்டு மந்தையைக் காவல் புரிந்து வந்தது. ஒவ்வொரு நாள் இரவிலும் ஒவ்வொரு ஆடாகத் தின்றும் சந்தோஷித்தது.

4. ஊருக்குச் சென்ற இடையன் திரும்பிவர அநேக நாட்களாயிற்று. அதற்குள் ஓநாயும் அநேக ஆடுகளைக் கொன்று தின்றுவிட்டது. இடையன் ஊரிலிருந்து திரும்பிவந்து பார்த்தான். தன்னுடைய ஆடுகள் காணுமற்போனதைப்பற்றி வருத்தப்பட்டான். தன்னுடைய அறிவீனத்திற்குத் துக்கித்தான். தான் மூடனுனதற்கும் வெட்கினுன்.

துஷ்டர்களை நம்பலாகாது.



20. மைனு

1. மைனு சாதாரணமாக நமது வீட்டுத் தோட்டங்களில் காணப்படும். இதன் சரீரம் முழுமையும் கருமை நிறமான இறக்கைகள் அடர்ந்து இருக்கும். உட்புறம் மிருதுவான வெண்மை நிறமுள்ள இறகுகள் நிறைந்திருக்கும். இதனுடைய வாய், அலகு, கால்கள் மஞ்சள் நிறமாக இருக்கும்.

2. மைனு பார்வைக்கு மிகவும் அழகாய் இருக்கும். ஆண் மைனுவின் தலை, பெண் மைனு வின் தலையைக்காட்டிலும் சற்று பெரிதாயிருக்கும். மைனு தன் குஞ்சுகளுடனே மட்டும் இரை பொறுக்கும். மைனு தரையில் நடந்து செல்லும் பொழுது பார்வைக்கு நன்ருய் இருக்கும்.

3. மைனு பெரும்பாலும், வெட்டுக்கிளி, புழு, பூச்சி முதலியவற்றையும், சிறுபான்மை

தானியங்களையும் உட்கொள்ளும். ஆனால் வெட்டுக் கிளியைப் பிடித்துத் தின்னப் பிரியம் அதிகம். குடியானவர்களுக்கு, பயிர் பச்சைகளை அழிக்கக்கூடிய பூச்சிகளைத் தின்று மிகவும் நன்மை செய்கிறது.

4. மைனாவுக்குக் கூடுகட்டத் தெரியாது. அதனால் பாழடைந்த வீட்டின் பொந்துகளிலும், மரங்கொத்தி இவைகள் விட்டுப்போன மரப் பொந்துகளிலும், தன்னுடைய கூட்டை அமைத்துக்கொள்ளும். மைனாவின் சத்தம் காதுக்கு மிகவும் இனிமையாயிருக்கும்.

5. மைனாவைப் பேசப் பழக்கினால் நன்றாகப் பேசும். இதன் இனிமையான சத்தத்தைக் கவனித்து, நமது காருண்ய கவர்ன்மெண்டார் இப்பறவையைச் சுடக்கூடாது என்று உத்திரவு இட்டிருக்கின்றனர்.

---

21. அன்னையைக் காத்த மைந்தன்

1. திருப்பூவனம் என்பது ஒரு கிராமம். அவ்வூரில் வயது சென்ற கிழவி ஒருத்தி இருந்தாள். அக்கிழவிக்குக் கண்ணப்பன் என்ற ஒரே புதல்வன் இருந்தான். அப்புதல்வனை மிக்க அன்புடன் வளர்த்து வந்தாள். புதல்வனும் தாயைத் தெய்வமாகக் கருதி வந்தான். ஆதலால் ஊரில்

உள்ள ஜனங்களெல்லாரும் கண்ணப்பனைக் கொண்டாடினார்கள்.

2. இஃது இவ்வாறிருக்க, ஒரு நடு இராத்திரியில் அவ்வூரில் தீப்பற்றிக்கொண்டது. ஜனங்கள் எல்லாரும் தங்கள் பொருள்களை எடுத்துக்



கொண்டு ஓட்டம் பிடித்தார்கள். இவைகளை அறிந்த சில திருடர்கள், அந்த ஜனங்களை வழி மறித்துப் பொருள்களைக் கொள்ளை அடித்தார்கள். தீப்பிடித்த சத்தத்தைக் கேட்டதும் கண்ணப்பன் விழித்தான். யாது செய்வதென்று எண்ணினான். தன் பொருள்களைப் பற்றிக் கவ

னிக்கவில்லை; தாயையே எண்ணினான். தூங்கிக் கொண்டிருக்கும் தன் தாயை தோளின்மீது தூக்கிக்கொண்டு ஓட்டம் பிடித்தான்.

3. கண்ணப்பன் ஓடிவருவதைத் திருடர்கள் பார்த்தார்கள். அவனிடம் இருக்கும் பொருளையும் அபகரிக்க எண்ணி, கிட்ட நெருங்கினர். கண்ணப்பனிடம் பொருள்களைக் கொடுக்கும்படி கேட்டனர். அதற்குக் கண்ணப்பன், 'என்னிடம் பொருள் ஒன்றும் இல்லை. தீப்பிடித்ததனால் என் வீட்டைவிட்டுத் தாயை மட்டும் தூக்கிக்கொண்டு ஓடிவந்தேன்' என்று தன் தாயை கீழே இறக்கினான். திருடர்கள் கண்ணப்பனை வாழ்த்தி, அவனுடைய புத்திக்கு மெச்சினார்கள்.

4. பின்பு, திருடர்கள் தாங்கள் கொள்ளையடித்த பணத்தில் கொஞ்சம் கண்ணப்பனுக்குக் கொடுத்துச் சென்றார்கள். கண்ணப்பனும் சந்தோஷமாகத் தன் தாயுடன் வேறு ஊருக்குச் சென்றான். எல்லாரும் கண்ணப்பனை முன்னிலும் பதின்மடங்கு நேசித்தனர்.

தாயிற் சிறந்ததோரு கோயிலுமில்லை.



22. வைசூரி

செந்தமிழ் நாடென்னும்—என்ற மெட்டு (கும்மி)

1. பைந்தமிழ் பேசிடும் பாலர்களே-சொல்வேன்
பாங்கான வாக்கியம் கேளுங்களே
தொந்தவியாதியில் வைசூரி-யென்றொரு
துஷ்ட நோயுண்டு தெரிந்திடுவீர் (பை)

2. இந்த உலகினில் அம்மையென்றுஞ்-சிலர்
ஈடில்லாதமக மாயியென்றும்
வந்தனை செய்து வழுத்திடுவார்-அந்த
வைசூரி என்னும் பெருநோயை (பை)

3. அந்தவியாதியின் தன்மைதனைச்-சொல்ல
அங்கம் நடுங்குமே யாவருக்கும்

சிந்தை திடத்துடன் சொல்லுகிறேன்-உங்கள்
சிந்தையில் மாருது வைத்திடுவீர் (பை)

4. இந்த வியாதி வருவதற்கு-முன்னம்
ஈரிரண்டு நாட்கள் காய்ச்சலுண்டாம்
பிந்திய நாட்களில் முத்துக்கள் போலவே
பெரிய கொப்பளம் தோன்றிடுமே (பை)

5. தேக முழுவதும் இப்படியானபின்
திண்ணிய முத்துக்கள் எல்லாம் சற்று
சோகமுடன் தளர் உற்ற பிறகவை
தோன்றிய இடத்திற் குழிவிழுந்தே (பை)

6. ஆடையாபரணம் பூட்டி-யனுதினம்
அழகு செய்யும் நம் தேகமதில்
பீடைவந் தெய்தவே சீரைக்குலைத்திடும்
பின்னும் பெருமோசம் தந்திடுமே (பை)

7. கண்ணைக் குருடாகச் செய்துவிடும்-இன்னும்
காதுஞ் செவிடாகச் செய்துவிடும்
மண்ணில் நடமாடக் கால்கள் இல்லாமலே
மாருமல் நொண்டியாய் ஆக்கிடுமே (பை)

8. இவ்விதம் ஏற்படும் வைசூரி நீங்கிட
ஏற்றமுறை யொன்று இயம்புகின்றேன்
அவ்விதம் பாலர்கள் செய்து வருவீரேல்
அண்டாது உங்கள் இடத்தினிலே (பை)

9. ஆங்கில டாக்டராம் ஜென்னர் துரை-அவர்
அன்புடன் கண்டு பிடித்தவொரு [தான்
தீங்கில்லா அம்மையைக் குத்திக்கொள்வது
சிறுவர் கடமை என்றறிவீர் (பை)

10. குத்திய பின் அம்மை கொப்பளமாகிக்
குணத்தைக் கொடுப்பதற் கென்றிடவே
உத்தமமாகிய அம்மைப் பாலதனை
உடனே அவ்விடம் வைக்கவேண்டும் (பை)

11. அம்மைப்பால்என்பதைக் கூறிடுவேன்-கன்றின்
அடிவயிற்றிற் கவனமுடன்
அம்மைக் கொப்பளங்கள் உண்டாக்கப்பெற்று
அஃதிலிருந்து எடுப்பதாகும் (பை)

12. நோய்களுக் கெல்லாம் தலைசிறந்த-இந்த
நோய்கண்ட பேரிடம் ஏகாதீர்
வாயிலின் முன்புறம் வேப்பிலை கட்டியே
வைத்திருந்தாலே தெரிந்திடுவீர் (பை)

13. ஏழுவருடத்திற் கோர்தரமே- நீவிர்
எல்லோரும் அம்மையை வைத்துக்கொண்டு
சூழும் வியாதியில் இருந்து மீளுவீர்
தொல்லை யகன்றிடும் தூரத்திலே (பை)

14. இப்படிச் செய்தும் அவ்வைசூரி-வந்தால்
இன்னல் அதிக முண்டாகாது
ஒப்பில்லாச் சூரியன் முன்பனிபோலவே
ஓடியே போகும் உணர்ந்திடுவீர் (பை)

15. மாட்சிமை தங்கும் துரைத்தனத்தார்-எல்லா
மக்களும் க்ஷேமமாய் வாழ்கவென்றே
சூட்சியுடன் அம்மை குத்தும் முறைதனைத்
தூய்மையாய் ஏற்பாடு செய்தனரே. (பை)



23. யானை

1. மிருகங்களிலெல்லாம் பெரியது யானை. யானை காட்டில் வசிக்கும். அது மிகவும் பருத்து, உயரமாய் இருக்கும். யானையின் நிறம் கருப்பு. முன் பக்கம் நீண்டு தொங்குவதற்குத் துதிக்கை என்று பெயர். அத்துதிக்கையில் இரண்டு நாசித் துவாரங்கள் உண்டு. அதனுல், தண்ணீரை உறிஞ்சிக் குடிக்கும்.

2. யானைக்குக் கால்கள் நான்கு. அக்கால்கள் பருத்துத் தூண்போலிருக்கும், யானையின்

காதுகள் முறம் போன்றவை. ஆனால் இவ்வளவு பெரிய மிருகத்திற்குக் கண்கள் மிகச் சிறியதாய் அமையப்பெற்றிருக்கின்றன. அக்கண்கள் மிகவும் கூர்மையானவை. சிறிய ஊசியைக் கீழே எறிந்தாலும், தன் துதிக்கையால் எடுக்கும் இயல்புடையது.

3. ஆண் யானையைக் களிறு என்றும், பெண் யானையைப் பிடி என்றும் சொல்வது வழக்கம். யானை மற்ற காட்டு மிருகங்களைப்போல, மிருகங்களைக் கொன்று தின்பதில்லை. காய், கனி, இலை முதலிய தாவரங்களையே தின்னும். அதனால் யானை, சாகபக்ஷிணி இனத்தைச் சேர்ந்தது. யானை ஐந்து அல்லது ஆறு வருடங்களுக்கொருமுறை குட்டிபோடும்.

4. யானையைப் பிடித்துப் பழக்குதல் இலேசான காரியமன்று. ஆனால் குட்டிகளைப் பிடித்துப் பழக்குதல் சுலபம். யானை மிகவும் உபயோகமுள்ள பிராணி. அது தனக்குச் செய்த நன்மை அல்லது தீமையை ஒரு பொழுதும் மறக்காது. தீமை செய்தால் சமயம் பார்த்துத் திரும்பச் செய்துவிடும். அரசர்கள் தங்கள் ஊர்வலங்களுக்கு யானையின் முதுகின்மேல் அம்பாரி அமைத்து உட்கார்ந்து கொள்ளுவார்கள். கோவில்களில் யானையை

அழகுக்காக வளர்ப்பார்கள். யானையை நடத்துகிறவனுக்கு யானைப்பாகன் என்று பெயர்.

5. ஆண் யானைக்கு இரண்டு நீண்ட வெண்மையான கொம்புகள் உண்டு. அக்கொம்புகளுக்குத் தந்தம் என்று பெயர். அத்தந்தம் மிகவும் விலையுயர்ந்தவை. யானையின் தந்தம் பல்லக்குகள் அலங்கரிக்கவும், சிறிய பொம்மைகள் செய்யவும் உபயோகப்படுகிறது. இன்னும் யானையின் எலும்புகளால் கத்திப்பிடி, சீப்பு, சிமிழ் முதலிய சாமான்களும் செய்யப்படுகின்றன. அதுபற்றியே, 'யானை இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன்' என்ற பழமொழி வழங்குகிறது.

6. மலையாள தேசங்களில் பெரிய மரங்களையும், கட்டைகளையும் தூக்குவதற்காக யானையை வளர்க்கிறார்கள். அதனால் கஷ்டமான வேலைகள் மிகவும் இலேசாய் முடிகின்றன. காட்டிலுள்ள யானைகள் வேகமாய் ஓடும். யானையை உயிருடன் பிடிப்பது கஷ்டமான காரியம். யானையைப் பிடிப்பவர்கள் ஒரு பெரிய பள்ளம் வெட்டுவார்கள். அப்பள்ளம் தெரியாதபடி மேலே குச்சிகளைப் பரப்பி, இலை தழைகளை விரித்துக் கரும்புகளை நட்டுவைப்பார்கள். யானைக்குக் கரும்பு தின்னப் பிரியம் அதிகம். அதனாலேயே 'யானை

வாய்க் கரும்பு' என்றும் சொல்லப்படுகிறது. கரும்பு களைத் தின்ன யானை வெகு வேகமாய் வந்து பள்ளத்தில் விழுந்து விடும். பிறகு, பழக்கின யானையின் உதவியினால் அந்த யானையையும் பழக்கிவிடுவார்கள்.

---

24. காகிதம்

1. பிள்ளைகளே! நாம் எதைக் கையில் பிடித்துக்கொண்டு படிக்கிறோம். பல காகிதங்களாலாகிய ஒரு புத்தகம் அல்லவா! இக்காகிதம் எவ்வாறு உண்டானதென்பதைப்பற்றி இங்கே படித்துத் தெரிந்து கொள்ளுவோம்.

2. காகிதம், கிழிந்த கந்தைத் துணிகளினாலும், வைக்கோலினாலும், மரப்பட்டைகளினாலும் செய்யப்படுகின்றது. முதலில் வைக்கோலினால் காகிதம் செய்யும் விதத்தைக் கண்டுபிடித்தார்கள். கிழிந்த கந்தைத் துணிகளின் அழுக்கை நன்றாகப் போக்கித் தண்ணீரில் ஊறவைப்பார்கள். ஊறியபின் ஒரு பெட்டியில் போட்டு அதனுள் இருக்கும் ஒரு உருளையைச் சுற்றுவார்கள். அவ்வுருளையில் பல ஆயிரக்கணக்கான கத்திகள் இருக்கும். அக்கத்திகள் துணிகளை நைத்துத் தண்ணீருடன் கலக்கும்படி செய்து குழம்பு போலாக்கும்.

3. அந்தக் குழம்பில் ஒருவித வெண்மைச் சுண்ணும்பைக் கலப்பார்கள். பிறகு அடுப்பில் வைத்துக் காய்ச்சி கெட்டியாகாமல் கலக்கிக் கொண்டே இருப்பார்கள். அப்படிக் கெட்டியாக வரும் சமயத்தில் கீழே இறக்கி அதற்காக ஏற்பட்ட ஒரு அச்சில் ஊற்றி உலரவைப்பார்கள். அப்பொழுது தகடுபோல் காணப்படும்.

4. பின்பு, அதனை ஒரு கம்பளியில் போட்டு இலேசான வஸ்திரத்தால் மூடுவார்கள். இப்படி ஒன்றன் மேலொன்ருக அடுக்கி, இயந்திரத்தில் வைத்து அழுத்தித் தண்ணீரை வெளிப்படுத்துவார்கள். தண்ணீர் வெளியானவுடன் அவற்றை எடுத்து நிழலில் உலர்த்திக் காகிதமாக உபயோகிக்கிருர்கள்.

5. வர்ணக் காகிதங்கள் உண்டாக்குவதற்கு, பலவகை வர்ணங்களைக் குழம்பாக இருக்கும் பதத்தில் சேர்ப்பார்கள். இப்பொழுது நீராவி இயந்திரங்களினுல் மிகவும் இலேசான காகிதங்களை உற்பத்தி செய்கிருர்கள். இக்காகிதங்கள் கூந்தற்பனை ஓலையினுலும், ஒருவித வாழைச் சருகுகளினுலும் செய்யப்படுகின்றன.

6. தற்காலம் நமது இந்திய நாட்டிலும் காகிதத் தொழிற்சாலைகள் ஏற்பட்டு வருகின்றன.

25. செய்யத் தகாதவை

தாளு சரீத்துவரு தெய்வமிது வென்று பொய்ச்
சத்தியஞ் செயல்வி டாது
தன்வீட்டில் ஏற்றிய விளக்கென்று முத்தந்
தனைக்கொடுத் தால்அது சுடும்
ஆனாலு மேலவர்கள் மெத்தவுந் தனதென்று
அடாதுசெய் யிற் கெடுதியாம்
ஆனைதான் மெத்தப் பழக்கம் ஆனாலுஞ்செ
யாதுசெய் தாற்கொன் றிடும்
தீனை தினிதென்று மீதுண் விரும்பினால்
தேகபீ டைகளே தரும்
செகராசர் சனுவென்ன ஏலாத காரியம்
செய்தான் மனம்பொ ருர்காண்
வானுடு புகழுமொரு சோணுடு தழையவிவண்
வந்தவ தரித்த முதலே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரே சனே.

---

26. சித்திரக்கிரீவன் என்னும் புரு

1. ஒரு நாள் ஓர் வேடன் பறவைகள் பிடிப் பதற்காகக் காட்டிற்குச் சென்ருன். அங்கு ஓர் மரத்தடியில் தன்னுடைய வலையை விரித்தான். அதில் தானியங்களையும் இறைத்து உட்கார்ந்து கொண்டிருந்தான்.

2. அக்காட்டில் அநேகம் புருக்கள் வசித்து வந்தன. அவைகளுக்கெல்லாம் சித்திரக்கிரீவன் என்னும் புரு அரசனுய் இருந்தது. அந்தப் புரு, தன் கூட்டங்களுடன் அவ்வழியாய்ப் பறந்து வந்தது. அங்கு தானியமணிகள் சிதறிக் கிடப் பதைப் புருக்கள் கண்ணுற்றன. அவை தானியங் களைப் பொறுக்க எண்ணங்கொண்டன. ஆனல் புரு அரசு, ‘இதோ மனித சஞ்சாரம் இல்லாத காடு. இங்கு தானியங்கள் சிதறிக் கிடப்பதற்குக் காரணமில்லை. எதையும் ஆலோசித்தே இறங்க வேண்டும்’ எனச் சொல்லிற்று.

3. அப்புருக்கூட்டத்தில் மிக்க கர்வங்கொண்ட புரு ஒன்று இருந்தது. அது உடனே ‘நாம் இப்படி ஆலோசித்துக் கொண்டே யிருந்தால் உணவு எப்படிக் கிடைக்கும். நாம் பட்டினி கிடக்க வேண்டியதுதான். ஆலோசிப்பதில் பயன் ஒன்று மில்லை’ எனப் பதில் கூறிற்று. இதைக்

கேட்ட மற்ற புருக்கள் எல்லாம் அப்படியே கீழே இறங்கி, வலையில் அகப்பட்டுக்கொண்டன. இவை களைச் சித்திரக்கிரீவன் என்னும் புரு அரசு பார்த்தது. 'வருவது வந்தே தீரும். நாம் மட்டிலும் தனியே இருத்தல் கூடாது' என்று தானும் வலையில் வந்து அகப்பட்டுக்கொண்டது.



4. அப்பொழுது மற்ற புருக்கள் சித்திரக்கிரீவனைப் பார்த்து, 'அரசே தங்களுடைய வார்த்தையை அலட்சியம் செய்தோம்' என வருத்தப்பட்டன. அதற்குச் சித்திரக்கிரீவன், 'இனி வருத்தமடைவதில் பிரயோஜனமில்லை. இவ்

வாபத்தினின்றும் தப்பும் வழியைத் தேடவேண்டும். வேடன் வருவதற்குள் நாம் ஒன்று சேர்ந்து வலையுடன் மேலே பறந்துவிடுவோம். எனக்கு எலி அரசன் ஒருவன் சிநேகிதன் இருக்கிறான். அவனிடம் போய் வலையை அறுத்துத் தப்பித்துக்கொள்ளலாம்' எனச் சொல்லிற்று. அப்படியே எல்லாம் மனம் ஒன்றாகி வலையுடன் மேலே பறந்தன.

5. வேடனும் புறாக்களைப் பிடிப்பதற்காக வந்தான். புறாக்களோ வலையுடன் மேலே பறந்து செல்லுவதைப் பார்த்தான். பின்பு தனக்குள் 'எப்படியும் இப்புறாக்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கீழே இறங்கும். அப்பொழுது பிடித்துக் கொள்ளலாம்' என எண்ணிக் கூடச்சென்றான். ஆனால் புறாக்கள் பறந்துகொண்டே இருந்தன. வேடன் எண்ணம் பலிக்கவில்லை. வேடனும் களைப்புடன் திரும்பத் தன் வீடு சேர்ந்தான். பிறகு புறாக்கள், எலி அரசனிடம் சென்று வேடன் வலையிலிருந்து தப்பின. ஆதலால், ஒன்று சேர்ந்து எக்காரியத்தைச் செய்தாலும் கைகூடும்.

'சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமை.'

27. சுகாதாரப் பாட்டு

நொண்டிச் சிந்து

சொல்லுவேன் பாலர்களே-உங்களுக்கு நான்
சுகாதார முறைகளை மகிழ்வுடனே
சிந்தையில் வைத்திடுவீர்-அதிகாலையில்
திட்டமுடனே எழுந்திருக்கவேண்டும்
வைகறைத் துயிலெழவே-சொல்லிய ஔவை
வாசக முறைப்படி நடந்திடுவீரே
தெய்வத்தை வணங்கவேண்டும்-அனுதினமும்
செம்மையாய் மலஜலத்தைக் கழிக்கவேண்டும்
நாற்றமிகுந்த மலத்தை நகர்ஜனங்கள்
நாட்டமில்லா விடத்திற் கழித்தல் நலமாம்
வீட்டிற்குள் கழிப்பதனல்-ஆகாயங்கெட்டு
மென்மேலும் வியாதியை உண்டாக்கிவிடுமே
பற்களைத் துலக்கவேண்டும்-துலக்கும்போது
பற்பொடியும் உமிக்கரி, சாம்பல், வேம்பும்
வில்வப் பழத்தைச்சுட்ட-கரியிவையும்
விரும்பி உபயோகித்தால் நன்மைபயக்கும்
துர்நாற்றம் ஏகிவிடும்-பற்களின்வலி
சொல்லாமலே சடுதியில் தொலைந்துபோகும்
ஆலும் வேலும் பல்லுக்குறுதி-இவ்வாசகத்தை
அன்புடனே ஞாபகத்தில் வைத்துநடப்பீர்

சுத்தஜலத்திற் குளிப்பீர்-இதனுல் என்றும்
தொத்துவியாதிகளெல்லாம் பற்ருதேகுமே
கெட்ட ஜலத்திற் குளித்தால்-ஒரு நொடியில்
கிட்டியே நளிர்ஜுரமும் சொரி சிரங்கும்
கஷ்டமுண்டாக்கிடுமே-மண்ணிற் புழுதி
கலந்த கந்தையாளுலும் கசக்கிக் கட்டு
கூழானுலும் குளித்துக்குடி-என்று பெரியோர்
கூறிய மொழியை நெஞ்சிற் கொண்டு தேருவீர்
அன்னத்தை உண்ணவேண்டும்-பாலோடாயினும்
அளவறிந்துண்ணுதலே நலமுண்டாகும்
நன்ருக மென்று உண்பீர்-இவ்விதம் செய்ய
நாட்டமுடன் ஜீரணமும் காட்டும் பாலர்காள் !
குறித்திடும் நேரந்தன்னில்-உணவதனைக் [டும்
கொள்ளவேண்டும் அழுகிய பண்டம் தள்ள வேண்
பசித்தபின் புசித்தல் நலம்-நன்றுவேகாத
பழைய கறியையுண்ணல் வலிக்கேயிடம்
வெள்ளை வஸ்திரந் தரிப்பீர்-எந்நாளும் அது
மேன்மையாம் வியாதிகளும்தாழ்மையாகுமே
அழுக்கு வஸ்திரந் தரித்தால்-நாளடைவினில்
அண்டுமே சொரிசிரங்கும் மண்டுஞ் சேலைப்பேன்
உஷ்ணமுண் டாகிடுமே-தேகமதனில்
ஒவ்வாத துர்நாற்றமும் உரிமையாகுமே

பள்ளிக்குச் செல்ல வேண்டும்-செல்லும்வழியில்
பாராமுகமாய் நடத்தல் கூடாதறிவீர்
படித்திட்ட பாடங்களை-ஆசிரியர்முன்
பக்தியுடன் சொல்லவேண்டும் சித்திபெறவே
போதிக்கும் பொன்மொழியை-அன்புடன்கேட்டு
புந்திதனில் வைத்தவ்வண்ணம் ஒழுகவேண்டும்
முகமூடிப் படியாதீர்-ஈராறங்குலம்
முன்னே தள்ளி வாசிப்பது நன்மையாகுமே
தேகப்பயிற்சி கொள்வீர்-திடம்பெறவே
சீலமுள்ள காற்றுவரும் இடந்தனிலே
இரத்தமும் சுத்தமாகும்-உட்கொள்ளும் பண்டம்
எளிதில் ஜீரணமாகும் வியாதியுமில்லை
சுத்தமுள்ள காற்றென்றே-நமக்கெந்நாளும்
சுகந்தரும் வாழ்வுக்கும் ஓர் ஆதாரமாகும்
தொத்து வியாதிக் கிடமாம்-ஈ, எலி, கொசு
சொந்தமாய் அணுகிடாது செய்துவருவீர்
நித்திரை கொள்ளவேண்டும்-இரவில்நெடு
நேரம் விழித்தால் வருமே நோய்களநேகம்
ஆகையால் சிறுவர்களே-சுகாதாரத்தை
அன்புடனே தெரிந்து நடந்திடுவீரேல்
நீடிய ஆயுள் பெற்றே-இப்பூவுலகில்
நீடூழியும் வாழ்ந்திடுவீர் நிச்சயந்தானே.

---

28. எறும்பு

1. நாம் முன் பாடத்தில் இப்பூமியிலுள்ள உயிர்ப் பிராணிகளில் பெரியது யானை என்று வாசித்தோம். அதே மாதிரி உயிர்ப்பிராணிகளில் மிகவும் சிறியது எறும்பு. அதனாலேயே, ‘யானை முதல் எறும்பு ஈருக சகல உயிர்களையும் காப்பவர் கடவுள்’ என்று சொல்லுகிறோம். எறும்பு தான் மிகவும் சிறிய ஜந்து. ஆனால் எல்லாரும் எறும்பைப் பார்த்திருக்கலாம். எறும்புகள் எங்கு பார்த்தாலும் ஊர்ந்து செல்லுகின்றன. அவை கள் மரங்களின் அடிகளிலும், உயரமான மேடு களிலும் தங்கள் இருப்பிடத்தை அமைத்துக்

கொள்ளும். அந்த இருப்பிடத்திற்குப் புற்று என்று பெயர். அப்புற்றுகளில் அநேக பாதைகள் இருக்கும்.

2. எறும்பின் உடம்பில் மூன்று பாகங்கள் உண்டு. அவை தலை, மார்பு, வயிறு என்பன. தலையின் முன்புறத்தில் இரண்டு உறுப்புக்கள் உண்டு. அவைகளுக்குத் தும்பிகள் என்று பெயர். அதற்குக் கால்கள் ஆறு. எறும்புக்குத் தலையில் இரண்டு கண்கள் உண்டு. அக்கண்கள் தலையின கீழ்பக்கம் சற்று குறுகியும், மேல்பக்கம் விசாலமாயும் காணப்படும். சில எறும்புகளுக்குக் கண்கள் கிடையாது. ஆனாலும் அவை வாசனையினுல் அறிந்துகொள்ளும். எறும்புக்கு வாசனையை அறியக்கூடிய சக்தி அதிகம். பண்டங்கள் எங்கு வைக்கப்பட்டிருந்தாலும் வாசனையினுல் அறிந்து, தங்கள் இனத்தாருடன் அங்கு சென்று மொய்த்துத் தின்னும். கண்ணில்லாத எறும்புக்குத் தும்பிகள் ஒடிந்துவிட்டால் வழி தெரியாது. அதனுல் அது இறந்து விடும்.

3. எறும்புகளில் அநேக வகையுண்டு. நம் வீடுகளில் திரியும் சில எறும்புகளைப் பற்றி மட்டும் தெரிந்து கொள்ளுவோம். அவைகள் சிற்றெறும்பு, சுள்ளெறும்பு, கட்டெறும்பு என்று சொல்லப்படும். சிற்றெறும்பு சிவப்பாக இருக்கும்

சுள்ளெறும்பு கருப்பும், சிவப்பும் கலந்த நிறமாகக் காணப்படும். கட்டெறும்பு கருப்பாக இருக்கும். கட்டெறும்புக்கு இறக்கைகள் உண்டு. எறும்புப் புற்றுகளில் கையை விட்டால் அவை கடிக்கும். கடித்தால் சில நிமிடங்கள் வரை கடுக்கும். செல்லெறும்பு என ஒருவகையுண்டு. அவை காகிதங்களையும், புத்தகங்களையும் அரிக்கும். இவ்வெறும்புகள் வெண்மையாய் இருக்கும். அவற்றைக் கரையான் என்று சொல்வது வழக்கம்.

4. எறும்பு மிகவும் சுறுசுறுப்புள்ள ஜந்து. அது வெய்யில்கால முழுவதும் வேலை செய்து ஆகாரத்தைச் சேகரிக்கும். பின்பு மாரிக்காலத்தில் வெளிவராமல் சேகரித்துவைத்த பண்டங்களைத் தின்னும். எறும்புகள் சாரை சாரையாய் ஊர்ந்து செல்லும். எறும்புகள் சாரை சாரையாகச் செல்லுவதால் கல்லுந் தேய்ந்துவிடும். அதனலேயே 'எறும்பூரக் கல்லுந்தேயும்' என்று சொல்லப்படுகிறது.

5. சிறுவர்களே! எறும்புகள் எவ்வளவு சுறுசுறுப்பாய் உழைக்கின்றன பார்த்தீர்களா! அதுபோல நீங்களும் இளமையில் படித்துச் சுறுசுறுப்பாக இருக்க முயலவேண்டும்.

29. கட்டளையைக் கடந்திலாதார்

தந்தைதாய் வாக்யபரி பாலனஞ் செய்தவன்
தசரத குமார ராமன்
தமையனருள் வாக்யபரி பாலனஞ் செய்தோர்
தருமனுக் கிளைய நால்வர்
சிந்தையில் உணர்ந்துருகு வாக்யபரி பாலனஞ்
செய்தவன் அரிச் சந்திரன்
தேகிஎன் ரோர்க்குஇலை யெனுவாக்ய பாலனஞ்
செய்தவன் தான் கர்ணன்
நிந்தைதவிர் வாக்யபரி பாலனஞ் செய்தவன்
நீள்பல மிகுந்த அநுமான்
நிறையுடன் பத்தாவின் வாக்யபரி பாலனம்
நிலத்தினில் நளாயினி செய்தாள்
மந்தைவழி கோயில்குள முங்குலவு தும்பிமுகன்
மகிழ்தர வுகந்த துணைவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரே சனே.



30. பிறருக்கு உழைப்பு

1. ஒரு நாள் ஓர் சிறுவன் ஒரு தோட்டத்தின் வழியாகப் போய்க்கொண்டிருந்தான். அப்பொழுது அவ்விடத்தில் ஒரு கிழவன் மாஞ்செடி ஒன்றை நட்டுக்கொண்டிருந்தான். அச்சிறுவன், கிழவன் மாஞ்செடி நடுவதைக் கண்ணுற்றான். பார்த்ததும் சிறுவனுக்கு ஆச்சரியம் உண்டாயிற்று. கிழவனைப் பார்த்து,

போன்னார் மேனியனே—என்ற மெட்டு.

ஐயா பெரியவரே—நல்ல
அறிவிற் சிறந்தவரே
வையந் தன்னிலென்ன—கன்றை
வைத்து நடுகின்றீர்

2. ஐயா ! பெரியவரே ! தாங்கள் தரையில் ஏதோ சிறிய செடி ஒன்றை நடுகின்றீர்களே! அது என்ன! என்று பரிகாசமாய்க் கேட்டான். அதற்கு அக்கிழவன்,

பையா	சொல்லுவேன்கேள்—பெரும்
பலனை	அடைவதற்கு
தூய்ய	மாங்கன்றொன்றை—குழி
தோண்டி	நடுகின்றேன்

3. 'அப்பா தம்பி! நீ சிறுபிள்ளைத்தனமாக இருக்கின்றாய். நான் கூறுவதைக் கவனமாய்க் கேள். பிற்காலத்தில் பெரிய பலனை அடைவதற்காக இம்மாங்கன்றை நடுகின்றேன்.' அதற்கு அச்சிறுவன் கிழவனைப் பார்த்து,

வயதும்	ஆகினதே—கனி
வாய்க்குமோ	உண்ணுதற்கே
பயனும்	கிட்டிடாத—வேலை
பார்க்கலாமோ	உரைப்பீர்

4. ஐயா பெரியவரே! உமக்கோ வயதாகியும் மயிரும் நரைத்துப்போய்விட்டது. காடு வா! வா! என்றும், வீடு போ! போ! என்றும் சொல்லுகிறது. இம்மாங்கன்று வளர்ந்து மரமாவது எப்பொழுது? மரமானதும், மாங்கனியைச் சாப்பிடுவது எக்காலத்தில்? தங்களுக்குப் பயனில்லாத

காரியத்தைச் செய்யலாமா? என்றான். அது கேட்டதும் கிழவன் சிறுவனைப் பார்த்து,

நல்லது நீ சொல்வது—இங்கு
நாடுங் கனிகளை நாம்
வல்லமை யாக உண்டோம்—அந்த
வகைதெரிந் தாயோ பையா

5. 'ஏ! சிறுவனே! நீ சொல்லுவது சரிதான். இத்தோட்டத்தில் காய்க்கும், காய்கனிகளையெல்லாம் நாம் சாப்பிடுகின்றோம் அல்லவா! அவைகள் எப்படிக் கிடைத்தன? நாம் எக்காலத்தில் இம்மரங்களை வைத்து உண்டாக்கினோம்? நம் முன்னோர்கள் தானே இம்மரங்களை உண்டாக்கியிருக்கவேண்டும். நாம் இக்கனிகளைத் தின்னும் போது மரம் வைத்தவர்களை இனிது வாழ்த்துகின்றோமல்லவா. அது போல இம்மாங்கன்றை நட்டு வளர்த்தால் உன்னைப்போன்ற சிறிய பையன்களுக்குப் பின்னால் உபயோகப்படும் என்று நினைத்து இக்காரியத்தைச் செய்கின்றேன்' என்றான். உடனே அச்சிறுவன் கிழவனைப் பார்த்து,

இந்த வகை தெரியேன்—உம்மை
எளன மாய் நினைத்தேன்
சிந்தை தேர் உதவி—செய்யும்
சீரெல்லாம் சொல்லுவீரையா

6. 'ஐயா! பெரியவரே! நான் சொல்லியதைப் பொறுத்தருளும். நானே சிறு பையன். வகை யறியாமல் ஏளனமாக நினைத்துக் கேட்டுவிட்டேன். தாங்கள் தயவுசெய்து இதுபோன்ற உபகாரத்தின் தன்மைகளை எனக்குச் சொல்லவேண்டும்' என்றான். அதற்கு அக்கிழவன் சிறுவனைப் பார்த்து,

எந்த லாபத்தையும்—நமக்
கென்பது கூடாது
இந்த உலகமக்கள்—யார்க்கும்
இன்பஞ் செய்தல் கடனே

7. 'தம்பி! எவ்விதமான பலனையும் நாமே அடைவதென்பது முடியாத காரியம். நமக்காக உலகில் எவ்வளவு பெரிய அறிவாளிகள் பாடு படுகிறார்கள். ஆகையால் நீ எக்காரியத்தைச் செய்தாலும் உனக்கென்று நினையாமல் பிறருக்கு நன்மை யுண்டாகும் என்று நினைக்கவேண்டும். அப்படியே அக்காரியங்களையும் செய்யவேண்டும். அதுதான் மனிதனாகப் பிறந்த நமது கடமை' என்று சொன்னான்.

8. பிறகு அச்சிறுவன் கிழவனுக்கு வந்தனம் செய்து, 'தாங்கள் சொல்லியபடியே செய்கின்றேன். பிழையை மன்னித்தருளும்' என்று சொல்லி விடை பெற்றுச் சென்றான்.

31. கடவுள் செயல்

1. தஞ்சையில் கோபாலன் என்ற சிறுவன் ஒருவனிருந்தான். அவன் மிக்க புத்திசாலி. எவருக்கும் உபகாரம் செய்யும் குணமுள்ளவன். அதனால் எல்லாரும் அவன் மீது அன்பு கொண்டார்கள். கோபாலன் வீட்டின் அருகில் ஒரு வயோதிகர் இருந்தார். அவரும் கோபாலன் மீது பிரியமுள்ளவர். ஒரு நாள் அவ்வயோதிகருக்குச் சில பச்சிலைகள் வேண்டியிருந்தது. அதனால் கோபாலனிடத்தில் தன் விருப்பத்தைத் தெரிவித்தார். கோபாலனும், தான் பச்சிலைகள் பறித்து வருவதாகச் சென்றான்.

2. வெளியிற் சென்ற கோபாலன் பச்சிலை களைப்பறித்துத் திரும்பி வந்துகொண்டிருந்தான். அப்பொழுது திடீரென்று மேகம் கறுத்தது. காற்றும், மழையும், இடியும் ஆரம்பித்தது. கோபாலனுல் மழையைச் சகிக்கமுடியவில்லை. இடி இடிப்பதைக் கண்டு பயந்தான். என்ன செய்வது என்று தோன்றவில்லை. அங்கு, மரம் ஒன்றில் பொந்து இருப்பதைக்கண்டான். உடனே அப்பொந்தில் போய் ஒளித்துக்கொண்டான். அப்பொழுது 'கோபாலா, இங்குவா' என ஒரு சத்தம் கேட்டது. கோபாலன் சுற்றிப் பார்த்தான். ஒருவரும் இல்லை என்று அறிந்தும், உடனே வெளியில் வந்தான். வெளியில் வந்ததும் மரத்தின் மீது ஒரு இடி விழுந்தது. பூமியும் கிடு கிடு என்று நடுங்கியது. தான் தங்கியிருந்த மரமும் தீப்பற்றி எரிய ஆரம்பித்தது.

3. கோபாலன் தன்னை கடவுள் காப்பாற்றியதற்குச் சந்தோஷித்தான். அப்பொழுது மறுபடியும், 'கோபாலா விரைவில் வா' என்ற சத்தம் கேட்டது. கோபாலன் சற்று திகைத்துச் சுற்றிப் பார்த்தான். சற்று தூரத்தில் ஒரு கிழவி நிற்பதைக் கண்டான். அக்கிழவிக்கு ஒரு மகன் உண்டு. அவன் பெயரும் கோபாலன். கோபாலன் கிழவியைக் கண்டதும், 'ஏன் என்னை

அழைந்தாய்?' என்றான். அதற்கு அக்கிழவி, 'அப்பா! நான் உன்னைக் கூப்பிடவில்லை. என் மகனை அழைத்தேன். அவன் மாடு மேய்க்கச் சென்றிருந்தான். காற்றும், மழையும் அதிகமாக இருப்பதால் என் மகனையே அழைத்தேன்' என்றாள்.

4. கோபாலன், 'தாயே சற்று நேரத்திற்கு முன் ஒரு மரப்பொந்தில் இருக்கும்பொழுது ஒரு குரல் கேட்டது. கடவுள் செயல் என்று எண்ணி வெளியில் வந்தேன். உடனே மரமும் இடி விழுந்து எரிந்தது. நானும் உயிர் பிழைத்தேன்' என்றான். அதற்கு அக்கிழவி, 'கடவுள் செயல் இன்னதென்பது நம்மால் சொல்லமுடியாது. கடவுள் உன்னை காப்பாற்றும் பொருட்டே என்னை இங்கு அனுப்பினார்போலும். கடவுள் தன்னை நம்பினவர்களை எப்பொழுதும் கைவிட மாட்டார். அவர் நேரில் தெரியாவிட்டாலும் எவ்வுருவமாகவாவது நின்று காப்பாற்றுவார்' என்றாள்.

5. பின்பு, கோபாலன் கடவுளை நினைத்துக் கொண்டே பச்சிலைகளுடன் தன் வீடு சேர்ந்தான். வயோதிகரிடம் நிகழ்ந்தவற்றைச் சொன்னான். வயோதிகரும் அவனை வாழ்த்தினார்.

32. கொன்றைவேந்தன்.

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
ஆலயந் தொழுவது சாலவும் நன்று
இல்லறம் அல்லது நல்லறம் அன்று
ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்
உண்டிச் சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு
ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்
எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்
ஏவா மக்கள் மூவா மருந்து
ஐயம் புகினும் செய்வன செய்
ஒருவனைப்பற்றி ஓரகத் திரு
ஓளவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு
அஃகமும் காசும் சிக்கனத் தேடு
கற்பெனப் படுவது சொல் திறம் பாமை
காவல் தானே பாவையர்க்கு அழகு
கிட்டாது ஆயின் வெட்டென மற
கீழோர் ஆயினும் தாழ உரை
குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை
கூர் அம்பு ஆயினும் வீரியம் பேசேல்
கெடுவது செய்யின் விடுவது கருமம்
கேட்டில் உறுதி கூட்டும் உடைமை
கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி
கொற்றவன் அறிதல் உற்றிடத்து உதவி

கோட்செவிக் குறளை காற்றுடன் நெருப்பு
கௌவை சொல்லின் எவ்வருக்கும் பகை
சந்ததிக் கழகு வந்திசெய்யாமை
சான்றோர் என்கை ஈன்றோர்க்கு அழகு
சிவத்தைப் பேணின் தவத்திற்கு அழகு
சீரைத் தேடின் ஏரைத் தேடு
சுற்றத்திற்கு அழகு சூழ இருத்தல்
சூதும் வாதும் வேதனை செய்யும்
செய்தவம் மறந்தால் கைதவம் மாளும்
சேமம் புகினும் யாமத்து உறங்கு
சையொத் திருந்தால் ஐயமிட்டுண்
சொக்கர் என்பவர் அத்தம் பெறுவர்
சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்
தந்தைசொல் மிக்க மந்திரம் இல்லை
தாயின் சிறந்தது ஒரு கோவிலும் இல்லை
திரைகடல் ஓடியும் திரவியந் தேடு
தீராக் கோபம் போராய் முடியும்
துடியாப் பெண்டிர் மடியில் நெருப்பு
தூற்றும் பெண்டிர் கூற்றெனத் தகும்
தெய்வம் சீறின் கைதவம் மாளும்
தேடாது அழிக்கின் பாடாய் முடியும்
தையும் மாசியும் வையகத்து உறங்கு
தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது

தோழனோடும் ஏழைமை பேசேல்
நல்லிணக்கம் அல்லது அல்லற் படுத்தும்
நாடெங்கும் வாழக் கேடு ஒன்றும் இல்லை
நிற்கக் கற்றல் சொல்திறம் பாமை
நுண்ணிய கருமம் எண்ணித் துணி
நூல்முறை தெரிந்து சீலத் தொழுகு
நெஞ்சை யொளித் தொரு வஞ்சகம் இல்லை
நேரா நோன்பு சீர் ஆகாது
நைபவர் எனினும் நொய்ய உரையேல்
நொய்யவர் என்பவர் வெய்யவர் ஆவர்
நோன்பு என்பது கொன்று தின்னாமை
பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும்
பாலோடு ஆயினும் காலம் அறிந்துஉண்
பீரம் பேணி பாரந் தாங்கும்
புலையும் கொலையும் களவும் தவிர்
பெற்றோர்க் கில்லை சுற்றமும் சினமும்
பேதமை என்பது மாதர்க் கணிகலம்
பையச் சென்றால் வையம் தாங்கும்
பொல்லாங்கு என்பவை எல்லாம் தவிர்
மருந்தே ஆயினும் விருந்தோடு உண்
மாரி அல்லது காரியம் இல்லை
மின்னுக்கு எல்லாம் பின்னுக்கு மழை

மீகாமன் இல்லா மரக்கலம் ஓடாது
முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்
மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்
மெத்தையில் படுத்தல் நித்திரைக்கு அழகு
மேழிச் செல்வம் கோழை படாது
மொழிவது மருக்கின் அழிவது கருமம்
மோனமென்பது ஞான வரம்பு
வளவன் ஆயினும் அளவரிந்துஅழித்துஉண்
வானம் சுருங்கின் தானம் சுருங்கும்
விருந்திலோர்க்கு இல்லை பொருந்திய ஒழுக்கம்
வீரன் கேண்மை கூரம் பாகும்
உரவோர் என்கை இரவாது இருத்தல்
ஊக்கம் உடைமை ஆக்கத்திற்கு அழகு
வெள்ளைக்கு இல்லை கள்ளச் சிந்தை
வேந்தன் சீறின் ஆந்துணை இல்லை
வையந்தோறும் தெய்வம் தொழு
ஒத்த இடத்து நித்திரை கொள்
ஓதாதார்க் கில்லை உணர்வொடு ஒழுக்கம்.

முற்றிற்று.

PRINTED AT THE MEENAKSHI VILAS PRESS, MADURA:—14

எம் சொந்தப் பிரசுரங்கள்

பாடப் புத்தகங்கள்

புதிய பிரதம பாடம்

	முதற் புத்தகம்	0	2	0
ஷை	இரண்டாம் புத்தகம்	0	3	0
ஷை	மூன்றும் புத்தகம்	0	4	0
ஷை	நான்காம் புத்தகம்	0	5	0
ஷை	ஐந்தாம் புத்தகம்	0	6	0

கணிதப் புத்தகங்கள்

புதிய பிரதம கணிதம்

	முதற் புத்தகம்	0	5	0
ஷை	இரண்டாம் புத்தகம்	0	5	0
ஷை	மூன்றும் புத்தகம்	0	6	0
ஷை	நான்காம் புத்தகம்	0	8	0
பிரதம எண்சுவடி வாய்ப்பாடு		0	1	0

உபபாடப் புத்தகங்கள்

ஆத்திசூடி விளக்கக் கதைகள்	0	2	0
உலகநீதி விளக்கக் கதைகள்	0	3	0
வெற்றிவேற்கை விளக்கக் கதைகள்	0	4	0
துரைத்தனம் (முதற் புத்தகம்)	0	4	0

க. ஆ. ராஜாப் பிள்ளை,
பப்ளிஷர் & புக்ஸெல்லர், மதுரை.